# Bank of Ceylon Pensioners' Association
## Jaffna District

## இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்
## யாழ். மாவட்டம்

12th Issue
12வது வெளியீடு

வெளியீடு:
**மலர்க்குழுவினர்**

| | | |
|---|---|---|
| Title | : | BoC ETERNAL BANKER |
| Chief Editor | : | K.Balasubramaniam |
| Cover Design | : | Editorial Committee |
| First Edition | : | March 2012 |
| Published by | : | Bank of Ceylon Pensioners' Association<br>Jaffna District, 1st floor<br>Bank of Ceylon Supra Grade Branch<br>Hospital Road, Jaffna. |
| E-mail | : | bocpensionersasso.jd@gmail.com |
| Printers | : | Guru Printers, 39/2, Adiyapaatham Road,<br>Thirunelvely, Jaffna. |
| No of Pages | : | |
| No of Copies | : | 250 |
| Paper Used | : | 70 Gsm |
| Subsidized Price | : | Rs. 100/- |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இலங்கை வங்கி வாழ்நாள் வங்கியாளர் |
| தலைமை ஆசிரியர் | : | க.பாலசுப்பிரமணியம் |
| அட்டை வடிவமைப்பு | : | மலர்க்குழு |
| முதற் பதிப்பு | : | பங்குனி 2012 |
| வெளியீடு | : | இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம், யாழ் மாவட்டம், முதலாம் மாடி<br>இலங்கை வங்கி.<br>ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| மின்னஞ்சல் | : | bocpensionersasso.jd@gmail.com |
| பதிப்பகம் | : | குரு பதிப்பகம், 39/2, ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| பக்கம் | : | |
| பிரதிகள் | : | 250 |
| தாள் வகை | : | 70 Gsm |
| சலுகை விலை | : | ரூபா 100/- |

## *Editorial Committee*

***Chief Editor*** **:** ***K.Balasubramaniam (Rtd. Asst. Gen. Manager, BoC Northern Province)***

***Sub Editor*** **:** ***N.Sivaratnam (Rtd. Asst. Gen. Manager, BoC Northern Province)***

***Committee Members*** **:** ***S.Vignarajah (Rtd. Senior Manager BoC Jaffna Supra Grade Branch)***

***K.Ulaganathan (Rtd. Operations Manager, BoC Northern Province)***

***K.Pathmanesan (Rtd. Senior Manager, BoC Jaffna Super Grade II Branch, Stanley Road, Jaffna)***

***D.Sujithan (Rtd. Manager, BoC Jaffna Super Grade II Branch, Stanley Road, Jaffna)***

***S.Nadarajah (Rtd. Officer BoC Kachcheri Branch)***

***Date of Release*** **:** ***September 2017***

## மலர்க்குழு

தலைமை ஆசிரியர் : க.பாலசுப்பிரமணியம் (ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்.)

உதவி ஆசிரியர் : ந.சிவரட்ணம் (ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர் இலங்கை வங்கி, வடமாகாணம்.)

உறுப்பினர்கள் : சி.விக்னராஜா (ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ். அதிமேற்தரக் கிளை)

க.உலகநாதன் (ஓய்வுநிலை செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்)

க.பத்மநேசன் (ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமையாளர், இலங்கை வங்கி 2ம் மேற்தரக்கிளை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

தே.சுஜிதன் (ஓய்வுநிலை முகாமையாளர், இலங்கை வங்கி 2ம் மேற்தரக்கிளை)

ச.நடராஜா (ஓய்வுநிலை பொறுப்பதிகாரி, இலங்கை வங்கி கச்சேரிக்கிளை)

வெளியீடு : புரட்டாதி 2017

## Contents - உள்ளடங்குபவை

1. உள் நுழைய முன் ஒரு சில வார்த்தைகள்
2. Message from the Asst. General Manager (Northern Province).
3. Guarantees
4. It's Fun Time By Lowi
5. Ten qualities which every bank job aspirant needs to nurture for a bright future in the banking sector.
6. மன அமைதி வேண்டுமா?
7. முதியோர்களால் முன்வைக்கப்படும் பெரும்பிரச்சினைகள்
8. வங்கிகளில் இடர் முகாமைத்துவம்
9. நிலத்தில் உள்ளவை நிலத்திற்கே சொந்தம், ஆனால் நிலத்தில் பொருத்தப்பட்டவை யாருக்கு சொந்தம்?
10. வங்கியாளரும் மற்றும் வங்கியியல் பரீட்சையில் (IABF) தோற்றுவோரும் நினைவில் நிறுத்த வேண்டிய முக்கியமான அம்சங்கள்
11. கிரிபண்டாவின் பகிடிகள் (பாகம் – ii)
12. வடமாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் நிதித்துறையினரின் அதிகரித்த செயல்பாடுகள் சாதகமா? பாதகமா? (15.01. 2017 இல் நடைபெற்ற பட்டிமன்றம்)
13. நினைவலைகள்
14. Photo Gallery



# உள் நுழைய முன் ஒரு சில வார்த்தைகள்

எமது பன்னிரண்டாவது வெளியீடு இதுவென்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கின்றோம். ஏனெனில் இச் சஞ்சிகையை வெளிக் கொணர்வதில் உள்ள கஷ்டங்களை நாம் ஏற்கெனவே உங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவித தடங்கல்களையும் தாண்டி நாம் இதுவரை பதினொராவது வெளியீடு வரை வந்திருக்கிறோ மென்றால் ஓய்வூதியக்காலத்தில் கூட சமகால வங்கியாளர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற எமது நோக்கம்தான் காரணமென்று நாம் நினைக்கின்றோம். பயனுள்ள சில விடயங்களைத் தேடி உங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறோம்.

உங்கள் உடனடி வயிற்றுப்பசி போக்க நீங்கள் கொள்வனவு செய்யும் ஒரு உணவு வகைக்கான செலவை விட உங்கள் அறிவுப்பசி போக்க வரும் இந்த வெளியீடு குறைந்த செலவையே கொண்டது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆகவே எல்லோரும் வாசித்துப் பயன்பெற வேண்டும் என்பதுதான் எமது முக்கிய நோக்கம். ஏதோ ஓய்வூதியர்களால் செய்யப்படும் இந்தச்சேவையை நீங்கள் முழுமனதோடு வரவேற்று எமக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வழக்கம்போலவே இந்த இதழும் சமகால வங்கியாளர்களுக்கும் ஏன் ஏனைய வாசகர்களுக்கும் கூட பயன்தருமென்று மனதார நம்பி உங்களை வரவேற்கிறோம்.

ஆசிரியர்,
க. பாலசுப்பிரமணியம்
ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி.

## Success

To laugh often and much, to win the respect of intelligent people and the affection of children, to earn the appreciation of honest critics and endure the betrayal of false friends, to appreciate beauty, to find the best in others, to leave the world a bit better, whether by a healthy child, a garden patch or redeemed social condition, to know that one life has breathed easier because you have lived. This is to have succeeded.

Ralph Waldo Emerson

"Rich" is just when you have lot of money. "Successful" is when you are doing what you love and love what you do, when you are surrounded by those you love, and you are rewarded in a manner that suits you. There is no quick-fix way to wealth. It takes time, effort, knowledge and energy.

Wealth Magic- Peter Spann



# Message from Asst. General Manager (Northern Province)

It gives me immense pleasure and pride to pen this Message of Felicitation to the "Eternal Banker" Magazine which is being published half yearly by the Jaffna District Pensioners' Association.


Pensioners are the pillars of this giant entity with a proud heritage of 78 years. Everybody knows that they have toiled hard in a challenging environment and contributed immensely to this great institution which has grown from strength to strength and gained a prestigious position in the Banking Industry. No one can deny that it is only with the valuable contribution of our pioneers, Bank of Ceylon has reached greater heights today.

Even though enormous developments have taken place in this institution with the advancement of Modern Technology, we still need the support and assistance of the pensioners to sustain the Bank's No. 1 position and to grow further. To keep the BoC Flag wave high, it is essential to have the fullest support of our past staff in all our endeavours.

I really feel happy to note that the Pensioners' Association is actively engaged in the Jaffna District, taking much care and concern of the welfare of the Pensioners. Indeed, it is pleasing to note that many useful reading materials are published in this magazine for the benefit of both past and present staff. I wish that this publication be continued for many more years to come with unique reading materials to all.

While extending my warm and sincere wishes and appreciation to all the Pensioners of the Jaffna District for their hard work and unwavering efforts, I wish them every success in all their future endeavours to further the mutual benefits of the Pensioners and the Bank.

M. J. Prabaharan<br>
Asst. General Manager<br>
(Northern Province)<br>
Bank of Ceylon



# Bank of Ceylon Pensioners' Association, Jaffna District

Secretary's Report for the period 1st March 2017 to 28st February 2018

1. Committee of management: During the period under review, 9th Annual General Meeting and four Committee meetings were held and am pleased to inform that all meetings were well attended.
2. Membership: During the period under review, new members joined the District Association increasing the total number of members from 214 to 222 as at end of 31st December. 2017. We welcome all our new members.
3. Deaths: Total number of deaths of members during the period was 5. Office bearers and members of the District Association attended the funeral and shared the grief with the respective families. We extend our deepest sympathies to the bereaved families.
4. 9th Annual General Meeting: Our 9th Annual General Meeting was held on Sunday the 5th February, 2017. Our Chief Guest was parent Association's President Mr.L.G.Abeysirigunawardena. Mr.J.F.G de Silva, past President and Mr.M.Sukumaran, Secretary also participated.
5. BOC Eternal Banker: 11th issue of Eternal Banker was released during this period. Even though the cost of the Journal was Rs.160/=, we collected Rs.100/= from our members and Bank's staff.
6. 38th Annual General Meeting: The 38th Annual General Meeting of the Parent association was held on Saturday April, 29th 2017 at the Lotus Room of the Grand Orient Hotel, Colombo 1. Our President Mr.K.Ulaganathan, Secretary Mr.A.Rasanayagam and committee member Mr.A.W.Jesudasan ateended this meeting.
7. Corporate Social Responsibility: As part of the Corporate Social Responsibility of the Branch Association, we have visited the Home for the Mentally Challenged Children ("The Ark"), Uduvil, Chunnakam on 6th January, 2018, and donated stationery to the value of Rs.20,863/50 to the poor students.
8. Visiting members who are ill: On 22nd July, 2017 and 6th January, 2018, we have visited members of the association, who are badly ill.

A.Rasanayagam,
Secretary,
1st Febraury, 2018.



# GUARANTEES

## DEFINITION OF GUARANTEE

"A written promise made by one person to be collaterally answerable for the debt, default, or miscarriage of another," Statute of Frauds, 1677, S.4. Guarantees may be either specific or continuing.

(a) **A specific guarantee** relates to one isolated debt only,e.g. where a bank accepts a guarantee to cover a single loan, made to a customer to enable him to buy a car, the loan being repayable in installments, i.e Personal Loan. To prevent the rule in Clayton's case applying to its detriment, the bank would open a separate loan account for the customer, and a specific guarantee would be drawn up covering only this account. A bank is rarely willing to accept a specific guarantee because of the inflexibility of future operations permissible on its customer's account.

(b) **A continuing guarantee** is one covering a series of transactions, and is therefore eminently suitable as banking security for a current account. In drawing up such a guarantee, care is taken to see that it covers the ultimate balance (s) owing at the date of determination.

PARTIES TO GUARANTEE & RESPONSIBLITIES

A) There are (03)three Parties: Principal Creditor, Principal Debtor and the Guarantor (surety)

B) Primary liability to pay must attach to the Principal debtor. The guarantor only becomes liable to pay if the debtor defaults.

C) The guarantor has no interest in the contract between the principal debtor and the principal creditor, except in so far as he agrees to accept liability if the debtor fails to pay.
NOTE-In the case of INDEMNITY the person who indemnifies the creditor promises/undertakes to pay him whether the debtor pays or not.i.e. He says that he will see that the creditor does not suffer.

N.Sivaratnam
(Sub Editor)

Reference;-Practice of Banking By E.P.Doyle

# It's Fun Time

## By Lowi

In a terrible accident at a railroad crossing a train smashed into a car and pushed it nearly four hundred yards down the track. Though no one was killed, the driver took the Railway Authority to court.

At the trial, the linesman insisted that he had given the car driver ample warning by waving his lantern back and forth for nearly a minute. He even stood and convincingly demonstrated how he'd done it. The court believed his story, and the suit was dismissed.

"Congratulations," the lawyer said to the linesman when it was over. " You did superbly under cross - examination". "Thanks, " he said "but he sure had me worried". "How 's that?" the lawyer asked. "I was afraid he was going to ask if the lantern was lit!"

### Repair

When my printer's type began to grow faint, I called a local repair shop where a friendly man informed me that the printer probably needed only to be cleaned. Because the store charged Rs.350 for such cleanings, he told me, I might be better off reading the printer's manual and trying the job my self. Pleasantly surprised by his candour, I asked , "Does your boss know that you discourage business?"

"Actually it's my boss's idea," the employee replied sheepishly. "We usually make more money on repairs if we let people try to fix things themselves first."

### Final Examination

The lady reported for her final examination which was made up of yes or no type questions. She took her seat in the examination hall, then stared at the question paper for five minutes. In a fit of inspiration, she removed a coin from her purse and began tossing the coin. If the coin landed on heads, then she circled 'yes' on the answer sheet. Otherwise, she circled. 'no' on the answer sheet.

After a half hour, the lady finished her examination, while the rest of the class was still sweating it out. A few minutes later, the moderator noticed the lady desperately tossing the coin and swearing and sweating. " What are you doing now," asked the moderator.

"I Finished the exam in a half hour," said the lady, "and now I'm re - checking my answers.

## Far Away Jobs

At the company lunch table, a middle - aged lady brags about her children's world travels: one son was teaching in USA, another was working in Italy, and her daughter was completing a year - long research project in England. One co - worker's quip, however, stopped her short. "What is it about you, " he asked, " that makes your kids want to get so far away?"

## Sober Doctor

The patient was lying in bed, still groggy from the effects of the recent operation. His doctor came in , Looking very glum. "I Can't be sure what's wrong with you," the doctor said. "I think it's the drinking". "Okey the patient said. "Can we get an opinion from a doctor who's sober?"

Courtesy Daily News

There can be no friendship without confidence and no confidence without integrity - Samuel Johnson.

I take as my guide the hope of a saint in crucial things, unity - in important things, diversity in all things, generocity.

Inaugural address of President George H.W. Bush

There is no real excellence in all this world which can be separated from right living - David Starr Jordan.

I finally found myself - when I lost myself - in the service of others.

- Mahatma Gandhi -

Work on your dreams or other people will make you work for theirs.

- Jony Gaskins, American author-

# Ten qualities which every bank job aspirant needs to nurture for a bright future in the banking sector.

**1. Organized Personality:**

Banking professionals have to deal with tremendous pressure and numerous responsibilities. Thus, they need to be efficient in managing multiple operations and should have attention to details at the same time. Good organization skills help in maintaining and managing important records and documentation, which is very crucial for the organization. And the same qualities can help a bank job aspirant to succeed in bank exams.

**2. Innate Problem-solver:**

A person who can solve problems naturally fits right for the job. Regardless of the situation and faults, a candidate should find solutions and make way for new opportunities. Develop problem-solving abilities; this will help in professional life as well as in personal.

**3. Quick Learner:**

With the fast moving world, technology in the banking sector is also updated regularly. The dynamic banking sector needs employees who not only understand the updated technology quickly but also get adapted easily to the new functions so as to make sure the banking operations are carried out smoothly. This translates equally well to the problems that a candidate faces in bank exams. One needs to quickly grasp the most essential things one needs to learn from the syllabus and show quick learning ability.

**4. Leadership:**

Leadership is necessary for the banking sector. Hence, it is important to have exceptional leadership quality for a successful career graph in banking jobs.

**5. Mathematical & Analytical Ability:**

Analysing problems and thinking logically for the growth of the bank and organization is absolutely necessary for the bank job. Predicting market trends and event based fluctuations are common in the financial sector. Keeping a keen eye on such events and using analytical skills will surely help the organization and thereby

growth. Coincidentally this is one of the must-have qualities for solving quantitative aptitude problems for bank exam candidates. Even if one does not have a natural flair for numbers, there is a need to have certain basic grounding in mathematics and analytical ability.

**6. Effective Communication:**

It is very important in every domain. Banking professionals directly deal with end customers. Hence, it is crucial that bank job aspirants nurture excellent written and verbal communication skills. It is also important as they need to communicate financial matters to their colleagues without any confusion. And of course, this translates into an essential quality when interacting with teachers, coaches, and other aspirants during the time of learning also.

**7. Excellent in independent and team work:**

It is important to work seamlessly with the team. Also, the best candidate is the one who can work independently on a given project and become a pro-active employee of the Bank. As a candidate, one should work in both groups in the classroom environment and also makes independent preparations based on one's needs.

**8. Co-operative and Professional Personality:**

As a bank job directly involves interaction with customers, clients, and stakeholders; cooperative and professional attitude is expected from them at the same time in this service sector industry.

**9. Alert and Awareness:**

Dealing with money matters is not an easy job. A bank job aspirant must always be alert towards any threat to the financial system and should always be aware of the changes in the financial sector.

**10. Honesty:**

It is the most important quality one should nurture. As the bank job deals with finances, honesty is the essential quality needed.

Every individual should try to incorporate all the above-mentioned qualities so as to define their persona in the banking sector.

Courtesy - Internet

# மன அமைதி வேண்டுமா?

ஒவ்வொரு மனிதனது மனமும் அமைதியையே எப்போதும் விரும்பும். ஆனால் அது அவரவர்க்கு கிடைக்கும் பாங்கில் தான் மனஅமைதியின் நிலைப்பாடு தங்கியுள்ளது. சில விடயங்களை பின்பற்றினாலேயே மன அமைதி என்பது எம்மில் தானாக ஏற்பட்டுவிடும். அதற்கு இயன்றளவு எதிர்பார்ப்புக்களை குறைத்துக் கொள்ளுங்கள். காரணம், எதிர்பார்ப்புகள் ஏமாற்றமடையும் போது நம்மால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாமல் போகலாம். அதிகம் பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். வீண் விவாதம் வேண்டாம். உங்கள் மனதிற்கு சரி என பட்டதை செய்யுங்கள். மனதார பிறரை பாராட்டுங்கள். பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். உங்கள் தேவையை பெரிதும் குறைத்துக் கொள்ளுங்கள் அதீத ஆசையே துன்பத்திற்கு காரணம். ஒரு போதும் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டு பார்க்காதீர்கள். புகழுக்கு ஒரு போதும் ஆசைப்பட வேண்டாம். கடமையை மட்டும் செய்தாலே போதும். மிகுதியை இறைவன் பார்த்துக் கொள்வான்.

ஏனெனில், பலனை எதிர்பார்த்து கடமையை செய்யும் போது எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லையெனில் ஏமாற்றத்தால் நம் மனம் தளர்ந்து போகும். பிறரிடம் குற்றம் காண வேண்டாம் மற்றவர்களை போல் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே உங்களுக்கு தடைகளை ஏற்படுத்தும். பிறர் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்ன பேசுகிறார்கள் என்றெல்லாம் ஒரு போதும் கவலைப்பட தேவையில்லை. நீங்கள் நேர்மையுடனும் மனசாட்சியு டனும் செயலாற்றுவீர்களேயானால், எப்போதும் நமக்கான தனித்துவத்தோடு மிளிரலாம். பிறரின் கண்டனத்திற்கோ விமர்சனத்திற்கோ ஒரு போதும் செவிசாய்க்க வேண்டாம். நடந்ததை நினைத்து கவலைப்படுவதை விட்டொழியுங்கள் மீண்டும் மீண்டும் அதனை நினைப்பதால் உள ஆரோக்கியம் தான் வலுவிழந்து போகும். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்றெண்ணிக் கொண்டு வாழ்வது தான் வாழ வழிவகுக்கும். நம்பிக்கைத் துரோகம் செய்வது உங்கள் நண்பனாயிருந்தாலும் மன்னித்து விடுவதோடு, விலகிவிடுங்கள் அது அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பாக அமையும். காரணம் யாரையும் தண்டிக்கும் உரிமை நமக்கில்லை. மனதை கடிவாளம் போட்டு உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுவதன் மூலம் பல இடர்களை களைய முடியும். இவ்வாறு பல விடயங்களை வாழ்க்கையில் பின்பற்றினாலே மன அமைதி என்பது நிச்சயம் கிடைக்கும். எமது துன்பத்திற்கு யாரோ காரணம் கிடையாது. எல்லாவற்றுக்கும் நாமே காரணமாவோம், வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் புதிதாகப் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள் காலம் மாறும் கனவுகள் மெய்ப்படும்.

நன்றி வீரகேசரி

**எந்த வீட்டில் பெண்ணை அடக்கி ஓர் ஆண் ஜெயிக்கிறானோ அங்கே ஒரு மிருகம் ஜெயித்தது என்று பொருள். எங்கே ஒரு ஆணை அடக்கி பெண் ஜெயிக்கிறாளோ அங்கே ஒரு பிடாரி ஜெயித்தது என்று பொருள். கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் தோற்றுப்போகத் தயாராக இருந்தால் குடும்பம் ஜெயிக்கிறது.**

**சொல்வேந்தர் சுகி சிவம்**

# முதியோர்களால் முன்வைக்கப்படும் பெரும்பிரச்சினைகள்

**Dr. வசந்தி தேவராசா MD.**

## அஜீரணம் (வயிற்று மந்தம்)

அஜீரணத்தில் பல வகையுண்டு. வயிற்றுப்புண் (Ulcer), பித்தப்பை வியாதி அல்லது புற்றுநோய் என்பவற்றுக்கான அறிகுறியாக சில சமயம் இது அமையலாம். அனேகமான சந்தர்ப்பங்களில் இந்தப் பிரச்சினையானது ஏனைய கடுமை குறைந்த காரணிகளோடு தொடர்புற்றுள்ளது. மார்பு நடு எலும்புக்குக் கீழ் ஏற்படும் ஒரு வகை எரிவுணர்ச்சி கொண்ட நெஞ்செரிவு பொதுவான வகைப்பட்ட ஓர் அஜீரணமாகும். அதிகப்படியான உணவினை உட்கொண்ட பின்னர் அல்லது குறித்த சில காரமான உணவினை உட்கொண்ட பின்னர் இந் நிலை ஏற்பட விளைகிறது. உணவுக்குழாயில் தோன்றும் அரிப்பினால் வழமையாக இது ஏற்படுகிறது. இளையோரை விட முதியோர் இந் நிலைக்குள்ளாகும் சந்தர்ப்பம் அதிகம். ஏனெனில், வயது போகப்போக இரைப்பைக்கும் உணவுக் குழாய்க்கும் இடையிலான வட்ட வடிவிலான சுருங்கு தசைகள் வலுவிழந்து போக, இரைப்பைக்கு அனுப்பப்பட்ட உணவு மீண்டும் உணவுக் குழாய்க்குள் தள்ளப்படுகின்றது. வயது செல்லச் செல்ல வெறுமையாவ தற்கான இரைப்பையின் ஆற்றல் நலிவடைவதால் நெஞ்செரிவும் உப்புதலும் கூட நிகழலாம். உள்ளே, அடைபட்டுக் கொண்ட வாயு பிடிப்பு நோய்க்குரிய அல்லது குத்துவது பொன்ற வலியை அடிவயிற்றிலும் மார்பிலும் தோள்களிலும் ஏற்படுத்துவது மற்றுமொரு வகையான அஜீரணமாகும். அத்துடன் இது அடிக்கடி வளியை வெளியேற்றும் ஏப்பத்திற்கும் அல்லது வாயு வெளியேற்றத்திற்கும் இட்டுச் செல்லலாம்.

## கையாளுதல்

அஜீரணம் ஏற்படாமல் தடுப்பதே முதலாவது உபாயமாகும். நெஞ்செரிவுக்குப் பங்களிப்புச் செய்யும் காரமான உணவுகள், பொரித்த மற்றும் உயர் கொழுப்புச் செறிவுடைய உணவுகள், கோப்பி, அதிக அமிலச் செறிவு கொண்ட சித்திரஸ் (எலுமிச்சை) மற்றும் தக்காளிச்சாறு போன்றவற்றை விலக்குக.

புகைத்தல், வாசனை கலந்த மெல் பிசின் (Chewing gum/ Peppermint gum) இனிப்பு வகைகள் - இவற்றாலும் மற்றும் புரொஜெஸ்ட்ரோன் போன்ற மருந்து வகைகள் மற்றும் நுண்ணுயிர்க் கொல்லிகள் (Antibiotics) என்பவற்றாலும் நெஞ்செரிவு ஏற்படலாம்.

## பங்களிப்புச் செய்யும் ஏனைய காரணிகள்

* மிகை எடை, விரைவாக உண்ணல், மன அழுத்தம் கொண்டிருத்தல், மார்பையோ அல்லது வயிற்றையோ இறுக்குகின்ற உடைகளை அல்லது பட்டிகளை அணிதல்.
* உணவை நன்கு மெல்லவும். சிறிய அளவிலான உணவை உண்ணவும் அல்லது சிறு அளவில் அடிக்கடி உண்ணவும். உண்ட பின் படுப்பதைத் தவிர்க்கவும் குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் நிமிர்ந்து நிற்கவும் அல்லது சுறுசுறுப்பாக இயங்கவும்.
* நெஞ்செரிவு ஏற்பட்டால் வயிற்றின் அமிலத்தை நடுநிலைப்படுத்தும் ஆக்கக் கூறுகளைக் கொண்ட மருந்துக் குறிப்பில் இல்லாத அமில எதிர்ப்பிகளை எடுக்க முயற்சிக்கவும்.
* சிறுநீரகப் பிரச்சினையுள்ள நபராயின், மக்னீசியமும் அலுமினியமும் கலந்த அமில எதிர்ப்பிகளை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். உயர் குருதியழுத்தம்

உடையவராயின், சோடியம் கலந்த அமில எதிர்ப்பிகளை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்க. விரைந்து உண்பதையும் தவிர்த்துக் கொள்க. இனிப்புக்கள், சூப்புமிட்டாய்கள் என்பவற்றைச் சப்புதல், உறிஞ்சுதல் அல்லது வைக்கோற் குழாயூடாகக் பானமருந்துதல் என்பவையும் தவிர்க்கப்படல் வேண்டும். காற்றை விழுங்குதலும் வாயுச் சேகரிப்புக்குப் பங்களிப்புச் செய்கிறது. அது போன்றே போஞ்சி மற்றும் உயர் நார்த்தன்மை கொண்ட மரக்கறி வகைகளும் வாயுச்சேகரிப்புக்குப் பங்களிப்புச் செய்கின்றன.

* எமது உடல் முதிர்ச்சியடைந்து செல்ல, பால் மற்றும் பாலுற்பத்திப் பொருட்களில் காணப்படும் லக்ரோஸ் என்னும் வெல்லத்தைப் பிளக்கும் நொதியத்தை எமது உடலானது குறைவாகவே உற்பத்தி செய்யலாம்.
* சிலரில் இந்நொதியமானது முற்றாகவே மறைந்து போகின்றது. இது "பால் வெல்லச் சகியாமை" என்ற நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதாவது பால் வெல்லத்தை உட்கொள்கையில் வாயு பறிதல், வயிற்றுத் தசைப்பிடிப்பு, ஓடு மலம் என்பவற்றை ஒருவர் அனுபவிக்கிறர். இதற்குத் தெளிவான ஒரு தீர்வு, பாலுற்பத்திப் பொருட்களை உட்கொள்வதைக் குறைத்தல் அல்லது முற்றாகவே தவிர்த்தலே. ஆனால், முதியோர்கள் தமக்குத் தேவையான கல்சியத்தைப் பெறும் முக்கியமான மூலமாகப் பாற் பொருட்கள் விளங்குவதால் இவ்வறிகுறிகள் ஏற்படாது தடுக்க லக்ரோஸ் குறைந்த பாலை அல்லது பாலமில (Lactacyd) மாத்திரைகளைப் பயன்படுத்தலாம். நன்கு மோர் பருகுங்கள். பிஞ்சு வெண்டிக்காய்கள், கத்தரிக்காய் உணவில் சேர்த்தக் கொள்ளுங்கள். பிரண்டை எனும் தாவரம் அஜீரணத்திற்கும் வயிற்றுப் புண்களுக்கும் நல்ல நிவாரணியாகும். பிரண்டையின் இலைக் கொழுந்தினைச் சமைத்துச் சாப்பிடுங்கள். இக்கைமருந்துகள் ஏதும் அஜீரணத்தைக் குறைக்காவிடின் வைத்தியரை அணுகுங்கள்.

## மலச்சிக்கல்

வயோதிபர்களால் அடிக்கடி செய்யப்படும் முறைப்பாடுகளுள் இதுவும் ஒன்று. பெருங்குடல் வழியாகக் உணவு மிகுதிகள் (மலம்) செல்வது தாமதமடைகையில் அல்லது குதத்தின் வழியாக மலம் செல்வது தடுக்கப்படுகையில் இது நிகழ்கிறது. வயது செல்லச் செல்ல மலம் அகற்றப்படும் செயன்முறையானது வினைத்திறனில் குறைவடைவதுடன் மலமானது குடலின் கீழ்ப்புறத்தில் அல்லது குதத்தில் நீண்ட நேரம் தங்க நேரிடுகின்றது. அங்கு அது கடினமடைவதால் வெளித்தள்ளுவதில் சிரமமேற்படுகிறது. அருவருப்பூட்டும் கடும் முயற்சி ஒருபுறமிருக்க மலச்சிக்கலானது மூலநோயை உண்டாக்குகிறது அல்லது மூலநோயை அதிகரிக்கிறது. இது குதவாயில் அரிப்பும் குருதிப்போக்கும் ஏற்பட வழிவகுக்கிறது.

## கையாளுதல்

மலச்சிக்கல் வராமல் தடுப்பதற்கு ஒருவர் குறிப்பிட்ட சில நடவடிக்கைகளை எடுக்க முடியும். உணவில் நார்ப்பொருளை அதிகம் சேர்க்கலாம். அவரையின் முழுத்தானிய மரக்கறிகள், பசளி, கங்குன், துண்டன்கீரை போன்ற பசுமையான மரக்கறிகள், வாழைப்பூ என்பன அவற்றுள் சில. இவை திரட்டிய முன்னேற்றிகளாகச் செயற்படுகின்றன. ஆனால் அதிக நார்ப்பொருளையும் உட்கொள்ளவேண்டாம். அவை குடல்களை அடிக்கடி அசைய வைக்கலாம். இவ்வசைவு முக்கிய ஊட்டச்சத்துக்கள் உள்ளுறுஞ்சப்படுவதைக் குழப்புவதுடன் மிகையான வாயுப் பறிவையும் ஏற்படுத்தலாம்.

* ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் 8 முதல் 10 டம்ளர்கள் வரையிலான நீர் மற்றும் ஏனைய திரவப் பதார்த்தங்களை அருந்துக. சீரணத் தொகுதியின் உராய்வினை நீக்குவதற்குப் போதிய அளவு திரவம் இல்லையேல் மலம் இறுக்கமடையலாம்.
* நார்ப்பொருள் குறைவான உணவு, சீனி, வெதுப்பிய பொருட்கள் என்பவற்றின் உட்கொள்ளலைக் குறைக்குக.
* உடல் ரீதியில் சுறுசுறுப்பாக இயங்குங்கள். மலத்தை இளக்குவதற்கு வயிற்றுத்தசைகளை வலுவடையச் செய்வதற்கும் குடல் அசைவொன்றின் போது மலத்தை வெளிதள்ளு வதற்கான ஆற்றலை மேம்படுத்துவதற்கும் உடல் அசைவு உதவுகிறது.
* முதலில் வைத்தியரிடம் ஆலோசனை கேட்காமல் மலமிளக்கி மாத்திரைகளையோ மலமிளக்கித் தூள் மருந்துகளையோ அல்லது வேறு எதையுமோ அல்லது குதச்செருக்கி மருந்துகளையோ பயன் படுத்த வேண்டாம். தவிடு, பழங்கள், மரக்கறிகள், திரவப் பதார்த்தங்கள், உலர் திராட்சை, திராட்சைச்சாறு, தோலுரிக்காத அப்பிள் பழங்கள் போன்ற இயற்கை மலமிளக்கிகளை பயன்படுத்துக. மேலும் மலமிளக்கிகளைப் பயன்படுத்துவது நாளடைவில் ஒரு பழக்கமாக மாறிவிடலாம். சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் ஏற்படும் உரு மாற்றம் அல்லது மன அழுத்தம் தற்காலிக குடல் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லலாம் என்பதையிட்டு நாம் விழிப்பாய் இருக்க வேண்டும். ஒவ்வாமை எதிர்ப்பிகளுக்கு எதிராகச் செயற்படும் மருந்துகள், சோர்வு நீக்க மருந்துகள், சிறுநீர் போக்கு மருந்துகள், போதையூட்டிகள், அலுமினியம், கல்சியம் என்பன நிறைந்த அமில எதிர்ப்பிகள் போன்ற அனேக மருந்து வகைப் பாவனைகளின் ஒருபக்க விளைவாகவும் மலச்சிக்கல் ஏற்படலாம். உணவுப் பழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினால் நீர் பதார்த்தங்களை உட்கொள்ளல் மற்றும் தேகாப்பியாசம் செய்தல் போன்றவற்றால் பயனில்லாமல் போகுமானால் வைத்தியரை அணுகுங்கள்.

நன்றி
சுகவாழ்வு

**சமுத்திரத்தில் அலைகள் எழுவது போல மனத்தில் எண்ண அலைகள் எழும். எழும் எண்ணங்களை அடக்கியாளுதலே யோகம், யோகம் என்றால் ஒன்றாதல் என்பர் பெரியோர். எல்லா விரல்களும் ஒன்று சேர்ந்தாற் றான் ஒரு பொருளை வசதியாக எடுக்கலாம். அதுபோல் இறைவனை அடைவதற்கு மனம் ஒருமைப்பட வேண்டும். இது இலகுவான காரியமல்ல, ஒரு நாளிலோ அன்றேல் ஓராண்டிலோ செய்து முடிக்கக்கூடிய காரியமல்ல. இடையறா முயற்சியினாலேயே எண்ணங்களை ஒருவாறு மட்டுப்படுத்தலாம். இந்தச் சித்தியைப் பெற்றுவிட்டால் அடங்காத மனத்தையும் இறுதியில் முற்றாக அடக்கிவிடலாம். இதுவே மாபெரும் வெற்றியாகும்.**

**யோகர் சுவாமிகள்**



# வங்கிகளில் இடர் முகாமைத்துவம்
# (Risk Management in Banks)

வங்கித் தொழில் என்பது பற்பல இடர்களைச்சந்திக்கும் ஒரு துறையாகும். வங்கிச் சேவைக்கான விலையிடல்கள் வங்கி எதிர் நோக்கும் இடர்களுடன் தொடர்புடையதாகும். இடர் அதிகமாக இருக்கும் போது விலையிடலும் (Pricing) உயர்வாக இருக்கும். வங்கிச் சேவைகள் ஆரம்பித்த காலப்பகுதியில் அது பல நெருக்கடிகளைக் கண்டது. சிலவேளைகளில் வங்கிகள் முறிவடையவும் செய்தன. அமெரிக்காவில் 1930ம் ஆண்டுகளில் வங்கிகள் பல முறிவடைந்தன. 1998ல் தெற்காசிய வங்கித்துறையானது மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டது. அதேபோன்று 2007 இல் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வங்கிகள் பல நெருக்கடிகளைச் சந்தித்தன. சில வங்கிகள் திவால் நிலைமைக்கும் ஆளாகின.

இவ்வாறு உலகத்தின் ஒரு பகுதியில் வங்கிகள் நெருக்கடிக்குள்ளாகும் போது அதை அலட்சியம் செய்து விடமுடியாது. ஏனெனில் இதன் தாக்கம் மற்றைய நாடுகளின் வங்கித்துறையையும் பாதிக்கும். அதாவது வங்கிச் சேவையானது உலகளாவிய ரீதியில் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். இதன் காரணமாகவே பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியானது (Bank For International Settlements) வங்கித் தொழிற்பாடு உலகளாவிய ரீதியில் ஸ்திரமாக இருப்பதை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கிறது. ஒவ்வொரு வங்கியும் இடர் முகாமைத்துவத்தை பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. அத்துடன் அவை வங்கித் தொழிலில் சந்திக்கும் இடர்களுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான அளவு மூலதனத்தைக் கொண்டிருக்க வேண்டும் என பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி எதிர்பார்க்கிறது. எனவேதான் ஒரு வங்கியானது தகுந்த முறையில் இடர் முகாமைத்துவத்தைப் பின்பற்றுவதன் மூலம் தான் கொண்டிருக்க வேண்டிய மூலதனத்திலிருந்து மிகக் கூடிய பலன்களைப் பெற முடியும்.

எனவேதான், இடர்முகாமைத்துவம் (Risk Management) என்னும் வார்த்தை யானது வங்கித் தொழில் துறையிலும் சரி நிதி உலகத்திலும் சரி மிகவும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

இடர் எனப்படுவது எதிர்காலத்தைப் பற்றிய சந்தேகம், மற்றும் எம்மை இன்றுள்ள நிலமையிலும் பார்க்க, விளைவு ஆனது மோசமான நிலைக்கு இட்டுச் செல்லும் என்னும் உண்மை ஆகிய இரண்டையும் குறிக்கிறது.

இடர் முகாமைத்துவம் என்றால் வங்கித் தொழில் நடைமுறைகளின் போது ஏற்படும் நட்டங்களுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து அதை மதிப்பிட்டு நட்டங்களை முடிந்தளவு குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் ஒரு வழிவகையாகும். பல்வகையானதும், சில வேளைகளில் சிக்கல் நிறைந்ததுமான சேவைகளை ஒரு வங்கி வழங்கும் போது அதனுடன் சம்பந்தப்பட்ட இடர்களை முகாமைத்துவம் செய்வது வங்கி முகாமைத்துவத்தின் முக்கிய பொறுப்பாகும்.

## வங்கி எதிர்நோக்கும் இடர்கள்

வங்கி எதிர்நோக்கும் இடர்களில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. கடன் சார்ந்த இடர் (Credit Risk)
2. திரவநிலை சார்ந்த இடர் (Liquidity Risk)
3. சந்தை சார்ந்த இடர் (Market Risk)
4. செயற்பாடு சார்ந்த இடர் (Operational Risk)

### 1. கடன் சார்ந்த இடர்

கடன் சார்ந்த இடர் எவராலும் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய இடர் ஆகும். வழங்கிய கடனும் அதற்குரிய வட்டியும் குறித்த தவணையில் செலுத்தப்படுமா எனும் ஐயமே இதன் கருத்தாகும். கடன் சார்ந்த இடரை குறைக்குமுகமாக வங்கி பிணை உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளுகிறது.

கடன் சார்ந்த இடரைச் சரியாக முகாமைத்துவம் செய்யாவிடின் வங்கியின் வட்டி வருமானம் குறைவதோடு இலாபத்தை ஈட்டத்தகு வங்கியின் வளங்களின் உச்ச பலனைப் பெற முடியாத நிலை உருவாகும்.

### 2. திரவநிலை சார்ந்த இடர்

வங்கியானது வாடிக்கையாளர்களின் மீள்கொடுப்பனவுக் கோரிக்கையை அல்லது அது போன்ற குறித்த திகதியில் பூர்த்தி செய்ய வேண்டிய கொடுப்பனவை அல்லது கடன் ஒன்றை வழங்குதலை நிறைவேற்ற முடியுமா என்பது போன்றவை சம்பந்தப்பட்டதே திரவநிலை சார் இடராகும். ஒரு வங்கியானது இப்படிப்பட்ட நிகழத்தக்க பொறுப்புக்களை எவ்வாறு சந்திக்கும்? வங்கி, ஒன்றில் வைப்புக்களைச் சேகரிக்க வேண்டும் அல்லது கடன் பெற வேண்டும்.

கடன் பெற்றவர் ஒருவர் கடனைக் குறித்த தினத்தில் திருப்பிச் செலுத்தாவிட்டாலும் வங்கியின் திரவநிலையில் பாதிப்பு ஏற்படலாம். காசு உடனடியாகத் தேவைப்படும் போது வங்கியானது தனது சொத்துக்கள் சிலவற்றைக் காசாக்க நேரிடலாம். எனவே வங்கிகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் போன்ற இலகுவாகக் காசாக்க கூடிய சொத்துக்களைத் தம்வசம் வைத்திருக்கின்றன. அத்துடன் தனது காசுப்பாய்ச்சலை (Cash flow) திறமையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் திரவநிலை சார்ந்த இடரைக் கையாளலாம்.

### 3. சந்தை சார்ந்த இடர்

வங்கிகளைப் பொறுத்தவரை சந்தை எனும் போது அது பணச்சந்தை (Money Market), அந்நியச் செலாவணிச்சந்தை (Foreign Exchange market), பங்குச் சந்தை (Share Market), பிணையங்கள் சந்தை (Securities Market), பண்டச்சந்தை (Commodities Market) போன்றவற்றைக் குறிக்கிறது. சந்தையில் நிகழும் மாற்றங்கள் எனும் போது அவை வட்டி வீதம், அந்நிய செலா வணி வீதம், பங்கு விலைகள், பிணைகள் விலைகள் மற்றும் பண்டவிலைகள் என்பனவற்றின் ஏற்ற இறக்கங்களைக் குறிக்கிறது.

வங்கிகளின் மூலாதார வியாபாரமானது வைப்புக்களை ஏற்பதும் கடன்களை வழங்குவதுமாகும். இதன் போது வட்டிச் செலவீனம் ஏற்படுவதோடு வட்டி வருமானமும் கிடைக்கிறது. எனவே வட்டிவீத மாற்றங்கள் வங்கியின் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதே போன்று வங்கிகள் ஏற்றுமதி இறக்குமதிக்கான வங்கிச்சேவை, அந்நியச் செலாவணி பணப்பரிமாற்றம் போன்ற சேவைகளிலும் ஈடுபடும் போது அந்நியச் செலாவணியைச் சந்தையில் வாங்கவோ விற்கவோ வேண்டிய தேவை ஏற்படும். அந்நியச் செலாவணி விகிதங்கள் சந்தையில் நிலையாக இல்லாமல் மாறிக் கொண்டிருப்பதினால் வங்கி இடருக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

நிதி நிறுவனங்கள், பங்குகள், கடன் பிணையங்கள் (Debt Securities), திறைசேரி, உண்டியல், திறைசேரி முறிகள் போன்றவற்றில் முதலீடு செய்வதிலும், வியாபாரம் செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றன. இலங்கையில் வர்த்தக வங்கிகள் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு தமது ஐந்தொகையில் முதலீட்டு ஏடு மற்றும் வியாபார ஏடு என இரண்டு ஏடுகளாகப் பிரித்து வைத்துள்ளன. வட்டி வீத மாற்றங்கள் பிணையங்கள், திறைசேரி உண்டியல் முறிகள் போன்றவற்றின் விலையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

சர்வதேச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இன்று தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த உலோகங்களை வாங்கி விற்கும் வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன. எனவே சந்தையில் இப்பண்டங்களுக்கான விலை மாற்றங்களால் வங்கியின் கையிருப்பில் உள்ள இப்பண்டங்களில் பெறுமதி மாற்றத்துக்குள்ளாகிறது. இந்த விலை இடருக்கும் வங்கி முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

## 4. செயற்பாடு சார்ந்த இடர்

பாசல் உடன்பாடு ("Basel Accord") "போதுமானதாக இல்லாத அல்லது தவறான உள்ளகச் செயன்முறைகளாலும், மனிதர்களாலும், முறைமைகளினாலும் அல்லது வெளியகச் சம்பவங்களினாலும் ஏற்படும் நேரடியான அல்லது மறைமுகமான இழப்பை ஏற்படுத்தும் இடர்" எனச் செயற்பாடு சார் இடரை வரைவிலக்கணம் செய்கிறது. இந்த வரைவிலக்கணம் சட்ட இடரை உள்ளடக்குகிறது. ஆயினும் மூலோபாய (Strategic) மற்றும் நற்பெயர் சார் (Reputational) இடர்களைத் தவிர்க்கிறது. (வங்கித் தொழில் மேற்பார்வைக்கான பாசல் குழு - 2006)

உள்ளக விதிமுறைகளைப் பின்பற்றாமை, சரியான ஆவணங்களை பெற்றுக் கொள்ளாமை, சரியாக அறிக்கையிடாமை போன்றவை தவறான உள்ளகச் செயன் முறைகளாகும்.

மோசடிகள், அதிகாரமின்றி நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றாமை, தொழிற் சங்க நடவடிக்கை போன்றவை மனிதர்கள் சம்பந்தப்பட்ட இடர்களாகும்.

தொழில்நுட்பக் குறைபாடு, போதுமானதற்ற கணனி ஆற்றல் (Capacity) கணனி முறைமை தடைப்படுதல், கணனிப் பாதுகாப்பு மீறப்படுதல் போன்றவை முறைமைகளைப் (system) பாதிக்கும் செயற்பாடுகளாகும்.

வெளியகச் சம்பவங்கள் எனும்போது மோசடிகள், கொள்ளைகள், வழங்குனர் இயலாமை, மின்சாரத்தடை, வெள்ளம், யுத்தம் போன்றவற்றைக் குறிக்கும்.

மேற்கண்ட இடர்களும் வங்கியின் சுமுகமான தொழிற்பாடுகளைப் பாதிக்கும் இடர்களாகும். இத்தகைய இடர்நேர்வுகளை எதிர்கொள்வதற்கு முன்னேற்பாட்டுத் திட்டங்களை வகுப்பது இன்றியமையாததாகும்.

## 5. இடரை முகாமைத்துவம் செய்தல்

இடர் முகாமைத்துவத்தைச் செயல்படுத்தும் போது கடன் சார்ந்த இடர், திரவநிலை சார்ந்த இடர், சந்தை சார்ந்த இடர் ஆகியவற்றை பெரும்பாலும் வங்கியின் தலைமையகமே மத்தியில் நிர்வகிக்கிறது.

செயற்பாடு சார்ந்த இடர்முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் செயற்பாட்டு கையேடு, சுற்று நிருபங்கள் போன்றவற்றின் மூலம் வங்கியின் தலைமையகம் ஒழுங்கமைத்தாலும் அவற்றை நாள்தோறும் நடைமுறைப்படுத்துவது வங்கியின் கிளை நிறுவனங்களிலேயே தங்கியிருக்கிறது.

மாற்றமடைந்து வரும் சூழலில் முறையான இடர்முகாமைத்துவம் செலவீனங் களைக் குறைக்கவும், இலாபத்தை அதிகரிக்கவும் உதவும். மிக முக்கியமாக நிலையான வருமானத்தை உறுதி செய்து கொள்ள இது அவசியமாகிறது.

சு. செல்வேந்திரன் FCIB (London)
ஓய்வுநிலை பிரதம முகாமையாளர்
இலங்கை வங்கி.

**ஆபிரகாம் லிங்கன் ஒருநாள் தன்னுடைய காலணியை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான். அப்போது பணக்காரன் ஒருவன் கிண்டலாக "ஜனாதிபதி அவர்களே! உங்கள் காலணியை நீங்களே துடைத்துக் கொள்கிறீர்கள்" என்றான். ஆபிரகாம் லிங்கன் அமைதியாக "ஆமாம் என் காலணியை நான் துடைத்துக் கொள்வேன். நீங்கள் யார் காலணியைத் துடைக்கிறீர்கள்?" என்று கேட்க பணக்காரன் வெட்கத்தில் தலை குனிந்தான்.**

ஒருமுறை ஓர் ஆலயத்தின் வாசலில் ஒரு கழுதை இறந்து கிடந்தது. குருவானவர் உடனே நகர அதிகாரிக்கு ஒரு கழுதை இறந்து கிடக்கின்றது. அதை எடுத்துப் போகுமாறு தொலைபேசி மூலம் அறிவித்தார். அதற்கு அதிகாரி "இறந்தோரை அடக்கம் செய்வது உங்கள் வேலை தானே சுவாமி" என்றார். சுவாமியோ "ஆமாம் அடக்கம் செய்வது எங்களது வேலைதான்" ஆனால் அதற்கு முன்னால் இறந்தோரின் உறவினருக்கு தெரிவிக்க வேண்டுமே. அதுதான் போன் (Phone) செய்தேன்" என்றார். அதிகாரி வாயடைத்துப் போனார்.



# நிலத்தில் உள்ளவை நிலத்திற்கே சொந்தம், ஆனால் நிலத்தில் பொருத்தப்பட்டவை யாருக்கு சொந்தம்?

## அவசியப்பாதை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய சட்ட விதிகள்

காணியொன்றுக்குள் கிடைக்கும் பொருட்கள் காணிக்கே உரியதாகும். காணியுடன் சேரும் இன்னுமொன்றும் காணிக்கே சொந்தமாகிறது. உதாரணமாக உரோமடச்சு சட்டத்தின் கீழ் காணியொன்றுடன் இணையும் வண்டல் அக்காணிக்கே சொந்தமாகிறது. இது (Accessio) என அழைக்கப்படுகிறது. (Accessio) இணைதல் என்பதன் பொருள் என்னவெனில் மண்ணில் உள்ளது மண்ணுக்கே சொந்தமாகும் என்பதாகும். (Superficies Solo Credit) என்ற உரோம டச்சு சட்டத்தின் மூல தர்மம் இதுவாகும்.

மேற்படி மூலதர்மத்தின் படி இன்னுமொருவரின் காணிக்குள் இணையும் இன்னு மொருவரின் கட்டடம் மூல காணிக்காரனுக்கே சொந்தம் ஆகிறது என்பதாகும். இதன்படி புதிதாக இணைவது காணிச் சொந்தக்காரனுக்கே உரியது என்பதால் மாற்றானின் சொத்து இன்னுமொருவருக்கு சொந்தமாவது நீதியற்ற வழியில் இன்னுமொருவன் பொருளாதார வளம் பெற வழி வகுக்குகிறது எனலாம்.

அதேநேரம் ரோம டச்சு சட்டத்தின் கீழ் ஒருவர் இன்னுமொருவரின் சொத்தை அநீதியாக எடுத்து செல்வந்தனாவதை (Unjust Enrichmnet) தடுப்பதற்கும் அசாதாரணமாக உயர்வடைவதற்கும் இடம் கொடுப்பதை தவிர்ப்பதற்கும் சில ஏற்பாடுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அவ் ஏற்பாடுகள் மூன்று வகைப்படும். அவைகளாவன:

அ) புதிதாக இணைக்கப்பட்டதை இணைத்தவர் மீளப் பெற்றுக் கொள்ள நீதிமன்ற அனுமதியைப் பெறுதல்."Jus Tollendi Sine Detrimento" என அழைக்கப்படுகிறது.

ஆ) சில சந்தர்ப்பங்களில் புதிதாக இணைத்தவற்றுக்கு இணைத்தவர் நஷ்ட ஈட்டை பெற்றுக் கொள்ள இடமளித்தல்.

இ) Jus Retentions: புதிதாக இணைத்தவர் நட்ட ஈட்டை பெற்றுக் கொள்ளும் வரையும்அக்காணிக்குள் இருந்து புதிதாக அமைத்தவற்றை பாதுகாக்கும் உரிமையை வழங்குதல்.

## Accesio இணைவு

(Accessio) இணைவு என்ற சித்தாந்தம் இலங்கையில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக விளங்கும் வழக்குகளில் ஒன்று பெர்ணாண்டோ எதிர் குரே என்ற வழக்காகும். (66 NLR 352) ஒருவர் தனக்குரிய காணிக்குள் பாடசாலை ஒன்று நடத்துவதற்கு பிறர் ஒருவருக்கு இடம் அளித்தார்.பாடசாலை முகாமையாளர் இக்காணிக்குள் கட்டடம் ஒன்றைக் கட்டினார். குத்தகைக் காலம் (Lease) முடிவடைந்த பின்னர் மேற்படி முகாமையாளர் அமைத்த கட்டடம் யாருக்குச் சொந்தம் என்ற வினா எழுந்தது.

அ) குத்தகை எடுத்தவர்அக்காணிக்குள் கட்டடம் அமைத்தது தனக்கு அக்காணியில் உடைமையுள்ளது என்ற சித்தாந்தத்தின் கீழாகும்.

ஆ) ஆயின் பிறர் ஒருவரின் காணிக்குள் புதிய கட்டடம் ஒன்று அமைக்கும் போது அக்கட்டடம் காணிச் சொந்தக்காரனுக்கே செல்ல வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

இ) புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தின் உரித்தை காணி மூலச் சொந்தக்காரனுக்கே வழங்குவதால் அவன் நியாய மற்ற முறையில் செல்வந்தனாவதை ஏற்றுக் கொள்கிறது.

மேற்படி காரணங்களை நன்கு ஆராய்ந்ததன் பின்னர் மேற்கூறப்பட்ட சூழ்நிலையில் காணியின் மூலச் சொந்தக்காரன் கட்டடத்தை அமைத்தவருக்கு ஓரளவு நியாயம் வழங்க வேண்டும் என்றும் அதற்கு அவர் ஓரளவு இழப்பீடு வழங்க வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக் கொள்கையை இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது பிரிவிடல் சட்டத்தின் (21 ஆம் இலக்க சட்டத்தின் கீழ்) நாம் காணலாம். தற்போதைய பிரிவிடல் சட்டத்தின் கீழ் காணி பொதுவான சொந்தத்தின் கீழ் இருக்கும் போது கூட்டுச் சொந்தக்காரர் ஒருவர் தான் அபிவிருத்தி செய்த பகுதியில் பிரிவிடலின் பின்னர் தொடர்ந்து இருக்கவும் அவரது அபிவிருத்திக்கு உரிய நஷ்டஈடு வழங்கும் வரையும் அப்பகுதியை வைத்துக் கொள்ளவும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. அவருக்கு இழப்பீடு கொடுக்கும் வரையும் அவரை அப்பகுதியிலிருந்து வெளியேற்ற முடியாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## பிரிவிடல் காணியில்லாத காணிகளை பொறுத்தவரையில் நிலையென்ன?

காணியை அபிவிருத்தி செய்த ஒருவரின் கட்டங்கள் மற்றும் பகுதிகள் மூலக் காணியின் ஒரு பகுதியாக உள்ளதா? இல்லையா? என நீதிமன்றம் பார்க்கும் போது அபிவிருத்தியானது மூலக்காணியின் பகுதியில்லை எனக் கண்டால் புதிதாக அபிவிருத்தி செய்தவர் தான் அபிவிருத்தி செய்த பகுதியை அப்புறப்படுத்த அவருக்கு இடம் அளிக்கப்படும்.

திசேரா எதிர் திசேரா (1940 - 42 NLR 60) ஆம் இலக்க வழக்கின் தீர்ப்புப்படி புதிய அபிவிருத்தியை மூலக்காணியில் இருந்து அப்புறப்படுத்த முடியாது என நீதிமன்றம் கண்டால் புதிதாக அபிவிருத்தி செய்தவருக்கு மூலச் சொந்தக்காரர் இழப்பீடு கொடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செய்தவரின் உடைமை எப்படிப்பட்டது என நீதிமன்றம் கவனிக்கும் போது அவரது உடைமை (Utdominus Possession) எனக் கண்டால் அவருக்கு இழப்பீடு பெற கூடுதலான வாய்ப்புள்ளது. ஆயினும் அபிவிருத்தி செய்தவரின் உடைமை (Utdominus) இல்லாத போதும் அவரது உடைமை நல் நோக்கமான உடைமையாக (Bonafide Possession) ஆக இருக்குமானால் அவருக்கு இழப்பீடு பெற இடமுண்டு. எனவே தீய நோக்குடன் உடைமை செய்பவர் (Malafide Possession) அபிவிருத்தி செய்வதால் அவர் இழப்பீடு பெற கஷ்டமாக இருக்கும்.

எனினும் தீய நோக்குள்ளவருக்கு கூட அபிவிருத்திக்காக இழப்பீடு வழங்க நீதிமன்றங்கள் முன்வருவது உண்டு. அதற்குக் காரணம் பிற ஒருவனின் அபிவிருத்தியின் காரணத்தால் மூலச் சொந்தக்காரன் அநீதியான முறையில் இலாபம் பெறுவதை தடுக்க வேண்டும் (Unjust Enrichment) என்ற உரோம டச்சுச் சட்ட சித்தாந்தத்தை எமது நாடு ஏற்றுக் கொண்டமையாகும்.

உரோம டச்சுச் சட்டத்தைப் பொறுத்த வரையில் அபிவிருத்தியானது 3 வகைக்குள் அடங்குகிறது.

1. காணியின் பிரயோசனத்திற்கு அது உதவுகிறதா?
2. அவசியமான தேவையைப் பூர்த்தி செய்ய அபிவிருத்தி தேவையா?
3. அவ் அபிவிருத்தி அழகுக்கான அபிவிருத்தியா?

என்பவையாகும்.

அழகுக்கான அபிவிருத்தியானால் அதற்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முன் வருவதில்லை.

ஏனைய அபிவிருத்தியால் காணியின் பெறுமதி அதிகரிக்காவிட்டாலும் நீதிமன்றம் இழப்பீடு வழங்குவதில் பின்னிற்கும் இந்நேரத்தில் அபிவிருத்திக்கானவற்றை காணியில் இருந்து அப்பறப்படுத்த நீதிமன்றம் கட்டளை வழங்கலாம். இது (Jus Tollend) எனப்படும்.

அபிவிருத்தி ஒன்று நடைபெறப்போகிறது என்று தெரிந்துகொண்டும் காணிச் சொந்தக்காரர் மௌனமாக இருந்தால் அந்த அபிவிருத்திக்கு காணிச் சொந்தக்காரன் இழப்பீடு கொடுக்க வேண்டும். யசஹாமி எதிர் பொடி ஹாமி (1943 - 44) NLR 385 ஆம் பக்க வழக்கை வாசிக்கவும் இதற்கு காரணம் என்னவெனில் அபிவிருத்தியால் தனது காணியின் பெறுமதி கூடும் என்ற எண்ணத்தில் மூல உரிமையாளர் அதற்கு இடம் அளித்தமையாகும்.

இன்னுமொருவரின் காணியை ஈடுபிடித்தவருக்கு அக்காணி சொந்தமாகாமல் தடுத்து நிறுத்தி காணியை மீட்டுக் கொடுத்த பிறர் ஒருவருக்கு இழப்பீடு கிடைக்குமா?

பிறர் ஒருவருக்கு காணியை ஈடு வைத்தவர் பலர் அதனை மீட்க முடியாமல் இருப்பதை நாம் அறிவோம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அயலவர் ஒருவர் அக்காணியை உரிய சொந்தக்காரனுக்கு மீட்டுக் கொடுத்தால் அவன் இழப்பீட்டுக்கு உரியவனாகிறான். இதற்கு காரணத்தை பின்வரும் வழக்கின் தீர்ப்பில் காணலாம். தளுவத்தை எதிர் சேனநாயக்க (67 NLR 52) இந்த வழக்கில் காணியின் உரிமைக்காரன் உள்ளூராட்சி மன்றத்திற்கு செலுத்த வேண்டிய சோலை வரியை செலுத்தத் தவறியதால் மேற்படி உள்ளூராட்சி மன்றம் அவனது காணியை ஏலத்தில் விட்டபோது அயல் வீட்டவன் அந்த வரியைச் செலுத்தி காணியை ஏலத்தில் போவதை தடுத்தான். பின்னர் வரியை செலுத்திய அவன் வழக்கை தாக்கல் செய்து காணி சொந்தக்காரனிடம் தான் செலுத்திய பணத்தைக் கேட்டான். நீதிமன்றம் அதனை எற்று அவனது பணத்தைக் கொடுக்குமாறு கட்டளையிட்டது. இதற்குக் காரணம் அபிவிருத்தி செய்ய உதவியவர் என்ற கோட்பாட்டையும் பிறர் ஒருவரின் பணத்தில் பணக்காரன் ஆகக்கூடாது (Unjust Enrichment) என்ற சித்தாந்தத்தையும் நீதிமன்றம் இணைத்து சுட்டிக்காட்டி பணத்தை செலுத்தியவரது பணத்தைப் பெற்றுக் கொடுத்தது.

மேலேயுள்ள விபரங்கள் பலருக்கு தெரியாது. ஆகவே பலர் அநியாயமாக தமது காணியை இழந்தும் உள்ளனர். ஆகவே இக் கட்டுரை எல்லோருக்கும் பயன்தரும் என்பதில் சந்தேகமில்லை.

## காணியில் சேவக உரிமை

சேவகம் (Servitude) என்பதன் கருத்து என்னவெனில் பிறர் ஒருவரின் காணியில் அக்காணிக்கு எவ்வித உரித்தும் இல்லாத ஒருவர் சில உரிமைகளை பெறுவதாகும். உரோம டச்சுச் சட்டத்தில் சேவக உரிமை பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளது. தனித்தனியாக அவற்றுக்கு சட்ட விதிகளும் உண்டு.

சேவகத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. i. ஆள் சார்ந்த சேவக உரிமை, ii. நிலம் சார்ந்த சேவக உரிமை. ஆள் சார்ந்த சேவக உரிமையானது குறித்த ஆளுக்கு உரியது. நிலம் சார்ந்த சேவக உரிமை என்பது ஆட்களைச் சாராமல் நிலத்தைச் சார்ந்தது.

உரோம டச்சு சட்டத்தின் கீழ் மேற்படி இரு சேவகங்களைத் தவிர மேலும் சில சேவகங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று நகரம் சார்ந்த சேவக உரிமையாகும். இதன் படி நகரத்தில் உள்ள காணிகளின் நெருக்கடிகளுக்கமைய சில சேவகங்கள் அமைந்துள்ளன. உதாரணமாக காற்று, சூரிய ஒளி ஆகியன பெற்றுக் கொள்ள இடம் கொடுத்தல்.

மற்றையது கிராமங்களில் காணப்படுவது. கிராமப்புறங்களில் நீண்ட காலங்களாக நடைமுறையில் இருந்து வரும் சில உரிமைகளை இது குறித்தும் உதாரணமாக வயற் காணிகளில் நெல்லை வெட்டிய பின்னர் அதனை காய வைக்க சூடு அடிக்க வழங்கப்படும் நிலங்களாகும். இவை பிறருக்கு சொந்தமானவை.

சேவக உரிமையில் காணி சம்பந்தமான உரிமையே முக்கியமானதாகும். அவற்றில் அவசிய தேவைக்கான பாதை என்பதை ஒவ்வொருவரும் அறிந்த கொள்வது நல்லது. உரோம டச்ச சட்டத்தின் கீழ் ஒருவர் அவசிய பாதை உரிமையைக் கோரலாம். இது VIA NECESITAI (Right to Necessary way) என அழைக்கப்படும். இதனை இலங்கை நீதிமன்றங்கள் அங்கீகரித்துள்ளன.

அவசியப் பாதை தேவை என்பதை தனக்கு தேவையென கோருபவரே நீதிமன்றத்தில் வழக்கை தொடர வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கை தொடர்ந்தால் அவரே அத்தேவையை நிரூபிக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும். நீதிமன்றத் தீர்ப்பினால் அளிக்கப்படும் அவசியப் பாதை என்பதை நீக்குவதானால் மீண்டும் நீதிமன்றமே அதனைச் செய்ய வேண்டும். சிலர் மாற்றுப் பாதையை கொடுத்தாலும் முன்னைய உரிமை நிலைத்திருக்கும்.

பெரிய காணி ஒன்றை சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கும் போது அத்துண்டுக் காணிகள் (Land Locked) சுற்றியுள்ள காணிகளினால் மறைக்கப்படுகின்ற நிலைக்கு மாறும். ஆகவே அக்காணித்துண்டுகளுக்கு பாதையைக் கேட்டு ஏனைய காணிக்காரர்கள் வழக்கை தாக்கல் செய்யலாம். கொஸ்தா எதிர் றொஸ்வேல் 1992 - ISLR 50 என்ற வழக்கில் ஆரம்பத்தில் விசாலமான காணி ஒன்றுக்கு சென்றுவர இருந்த வழிப்பாதையானது அக்காணி துண்டு துண்டுகளாகப் பிரித்த பின்னரும் (அவ்வழிப்பாதை) இருக்க வேண்டும் என தீர்க்கப்பட்டது.

லூசியா எதிர் சோமரத்ன என்ற வழக்கில் ஒருவர் இன்னுமொருவரின் காணியின் மீது சேவக உரிமை கொண்டிருந்தார். பின்னர் காணிச் சொந்தக்காரன் அப்பாதைக்குப் பதிலாக இன்னும் ஒரு பதில் பாதையை கொடுத்தார். ஆயினும் நீதிமன்றம் சேவக உரிமையை அங்கீகரித்த பின்னர் அதனை மாற்ற முடியாது என தீர்த்தது.

இவ்வாறு சேவக உரிமையில் அவசிய தேவைக்கான பாதைகளை வழங்க காணிச் சொந்தக்காரனுக்கு கடமையுண்டு என சட்டம் கூறுகிறது.

## தொகுப்புரை

சேவக காணியின் சொந்தக்காரன் ஒருவனாகவும் அதில் சேவக உரிமையை அனுபவிப்பவன் இன்னுமொருவனாகவும் இருப்பான்.

சேவக உரிமை ஆள் சார்ந்ததாக இருக்கலாம். நிலம் சார்ந்ததாக இருக்கலாம். ஆள் சார்ந்ததைக் குறிப்பிட்ட நபர்களே அனுபவிக்க வேண்டும். நிலம் சார்ந்ததை அந்நிலத்தடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் அனுபவிக்கலாம்.

காணி ஒன்று நாலாபுறமும் வேறு காணிகளால் அல்லது வேறு ஏதுவால் சூழப்பட்டு வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள ஒரேயொரு வழியே இருந்தால் கட்டாயம் நாலாபுறமும் சூழப்பட்டுள்ள காணிக்கு அயலவன் காணிக்குள் சேவக உரிமையுண்டு. இது அவசிய தேவைக்கான பாதை எனப்படும்.

ஒரு சேவகக் காணியை ஒருவர் சொந்தமாக்கிக் கொள்ளவும் முடியும். கருணாரத்ன எதிர் கேபரியெல் அப்புஹாமி என்ற வழக்கில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதன் படி இன்னுமொருவரின் காணிக்குள் தொடர்ந்து தங்கு தடையின்றி 10 வருடம் பாதை வழியை அனுபவித்தவர் மேலும் அக்காணிக்குள் குறித்த ஒரு பகுதியை (Route) மட்டுமே பாதைக்கு உபயோகித்திருந்தால் அப் பகுதியை அவர் ஆட்சியுரிமைச் சட்டம் கால வரையறை சட்டத்தின் கீழ் தனக்குரித்து என்று பிரகடனப்படுத்திக் கொள்ளலாம். நொத்தாரிஸ் ஒருவர் மூலம் அதனை பிரகடனப்படுத்திக் கொள்ளலாம். இது பற்றி தெளிவான அறிவைப் பெற பெர்னாண்டோ எதிர் ஜயசூரிய 50 NLR 564, என்ற வழக்கையும் கொஸ்தா எதிர் றொஸ்வல் என்ற வழக்கையும் மாரசிங்க எதிர் சமரசிங்க என்ற வழக்கையும் படிக்கவும்.

நன்றி

**K.G.ஜோன்**
சட்டத்தரணி

மேற்படி கட்டுரை யூன் 14.2017 புதன்கிழமை வீரகேசரி இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

# எம்மோடு வாழ்ந்த நெஞ்சங்களுக்கு எங்கள் அனுதாபம் கலந்த பிரியாவிடை


எம்முடன் வாழ்ந்து தம் குடும்பத்தினரை நிர்க்கதிக்குள்ளாக்கி தமது வங்கி வாழ்வின் அடையாளங்களையும் குடும்ப நினைவலைகளையும் மட்டும் எமக்குத் தந்த நமது முன்னாள் ஊழியர்கள் மரணித்து எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

- அமரர் K. அருளம்பலம்
- அமரர் S. பாலசுப்பிரமணியம்
- அமரர் S. ராஜேஸ்வரன்
- அமரர் K.K. சிதம்பரநாதன்
- அமரர் K. வைத்தீஸ்வரன்
- அமரர் T. பேரின்பநாதன்

எமது சங்கத்திலுள்ள தற்போதைய அங்கத்தவர்களுக்கும் எதிர்கால உறுப்பினர்களுக்கும் இவர்களைப் பற்றித் தெரியாமல் இருக்கலாம். எனவே இவர்களை கௌரவத்துடன் நினைவு கூரும் பொருட்டு பின்வரும் விபரங்களையும் **படத்தையும்** எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் உறவினர்கள்/உற்ற நண்பர்களிடம் வேண்டுகிறோம்.

பிறந்த திகதி
இறந்த திகதி
பெயர் : பாரியார்/கணவன்
பணி புரிந்த கிளைகளின் பெயர்

மலர்க் குழுவினர்





# வங்கியாளரும் மற்றும் வங்கியியல் பரீட்சையில் (IABF) தோற்றுவோரும் நினைவில் நிறுத்த வேண்டிய முக்கியமான அம்சங்கள்

1. திறைசேரி உண்டியலின் (TREASURY BILLS) முதிர்வு நாட்கள்.
   91 நாட்கள், 182 நாட்கள், 364 நாட்கள்.
2. 2010ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் உள்ள நீர்க்குறியீட்டு (WATER MARK) அடையாளம்.
   பறவைகள் (Birds)
3. ஒரு பார்வையற்றவர் அடையாளம் காணும் வகையில் 2010ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட தாள் நாணயத்தில் காணப்படும் அம்சம்.
   கையால் தொட்டு உணரக்கூடிய பெரியவட்டவடிவமான புள்ளிகள் (DOTS)
   (20/= 1 புள்ளி , 50/= 2 புள்ளிகள், 100/=3 புள்ளிகள்.
   500/= 4 புள்ளிகள், 1000/=5 புள்ளிகள், 5000/= 6 புள்ளிகள்)
4. இலங்கையில் நாணயத்தை வெளியிவிடுவது.
   இலங்கை மத்திய வங்கி (நாணயச்சட்டம் 59 OF 1949 SEC 10)
5. இலங்கை நாணயத்தாள்களில் கையொப்பம் இடுவோர்.
   i. நிதி அமைச்சர் ii. மத்திய வங்கியின் ஆளுநர்
6. நாணயச்சபையின் அங்கத்தவர்கள்.
   5 பேர் i. மத்திய வங்கியின் ஆளுநர் ii. நிதி அமைச்சின் செயலாளர்
   iii. நிதி அமைச்சின் சிபாரிசுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் 3 அங்கத்தவர்கள்
7. மத்திய வங்கியின் வட்டி வீதங்கள்.
   i. வங்கி வீதம் (BANK RATE) 15%
   ii. துணை நில் வைப்பு வசதி வீதம் (SDFR) (Standing Deposit Facility Rate) 7.25%
   iii. துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) (Standing Lending Facility Rate 8.75%
8. பண நிரம்பல் (Money Supply)
   1. M - பொது மக்களிடமும், வங்கியிலும் உள்ள தாள் - குற்றி நாணயங்கள்
   2. M1= M+ நடைமுறைக்கணக்கு மீதி
9. மத்திய வங்கி பணச் சந்தையில் வெளியிடும் நிதிக்கருவிகள்.
   1. திறைசேரி உண்டியல்கள் (TREASURY BILLS)
   2. திறைசேரி முறிகள் (TREASURY BONDS)
10. அரசாங்கத்தின் குறுங்கால நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள உதவும் நிதிக்கருவிகள்.
    திறைசேரி உண்டியல் - (Treasury Bill)

11. காசோலையில் கேள்வி என்னும் பதம் (ON DEMAND) உட்கிடையாக உள்ளது.
மா. உ. க. சட்டம் 1882 பிரிவு 10

12. வணிக வங்கிகள் தமது நாள் முடிவில் தமக்கு தேவையான குறுங்கால நிதிகளை பெற்றுக் கொள்ளும் சந்தை.
அழைப்புப்பணச்சந்தை (Call Money Market)

13. காசோலையில் காந்தமை நிரலில் காணப்படும் விடயங்கள்.
1. காசோலை இலக்கம் - Cheque Number
2. வங்கி குறியீடு - Bank Code
3. வங்கிக்கிளை குறியீடு - Branch Code
4. நடைமுறைக்கணக்கு இலக்கம் - Current Account Number

14. ஒரு காசோலையின் சுழற்சிக்காலம்/ வாழ்வுக்காலம்.
i. காசோலையின் சுழற்சிக்காலம் - 6 மாதங்கள்
ii.காசோலையின் வாழ்வுக்காலம் - 6 வருடங்கள்

15. போலியான அல்லது அருவமான தரப்பினருக்கு காசோலையை வரைய முடியும்.
மா.உ.க.சட்டம் 1882 பிரிவு 7③

16. கட்டளைக்காசோலையில் "Cash" என எழுதப்பட்டிருப்பின் அதற்கான மறுத்தல் குறியீடு.
முறையற்ற காசோலை (Cheque irregularly drawn)

17. கீழ் வருவனவற்றின் மறுத்தல் குறியீடுகள்.
i. காசோலையில் செல்லுபடி காலம் 3 மாதம் என எழுதப்பட்டு 3 மாதம் முடிவடைந்தால், செல்லுபடி காலம் முடிந்துவிட்டது. - Validity Expired
ii. காசோலையில் 6 மாதம் முடிவடைந்தால், காலாவதியான காசோலை - Stale Cheque
iii. காசோலையில் பின் திகதி இடப்பட்டால், பிற்திகதியிட்ட காசோலை - Post Dated Cheque

18. பெறுபவன் கணக்கு காசோலை, வங்கியினால் வரவு உறுதிப்படுத்தப்படாதவிடத்து வங்கியினால் இடப்படும் மறுத்தல் குறியீடு.
வரவிடப்படல் வங்கியின் உறுதிப்படுத்தல் தேவை Fate of proceeds requires bank's Confirmation

19. காசோலையில் உச்சத் தொகை.
100 மில்லியன் ரூபாவிற்கு மேல் வரையப்படும் போது செலுத்தும் வங்கி வரைந்தவரிடம் உறுதிப்பாட்டைப் பெறவேண்டும்.

20. பராயமடையாதோர் (Minor) காசோலையில் சாட்டுதல் செய்ய முடியும்.
மா.உ.க.சட்டம் 1882 பிரிவு 22④

21. எழுதத்தெரியாத ஒருவர் வாய் மூலம் இன்னொருவரை தனக்காக சாட்டுதல் செய்யுமாறு அங்கீகரிக்க முடியும்.
மா. உ. க. சட்டம் 1882 பிரிவு 93①

22. R.B. Robin என்ற முதல்வருக்கு H. Jones முகவராக இருப்பின் சாட்டுதல் கீழ் வருமாறு அமையும்.
H. Jones
Per Pro.R.B. Robin

23. ஒரு காசோலையை எழுதி வழங்கிய பின் அதன் கொடுப்பனவை இடைநிறுத்துவது - ஒரு குற்றவியல் (Criminal) குற்றமாகும்.
புதிய கடன் அறவிடல் சட்டம் 02 of 1990 பிரிவு 25

24. ஒரு காசோலையில் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கியின் குறுக்கு முத்திரை - Crossing Stamp எச்சந்தர்ப்பத்தில் காணப்படலாம்.

முகவராக இருக்கும் வங்கி சேகரித்து தனது வங்கிக் கணக்கில் வைப்பிட அனுப்பும் காசோலை

(உ + ம் : தேசிய சேமிப்பு வங்கி - NSB).

25. வாடிக்கையாளரின் கணக்கு விபரம் வைத்திருப்பவருக்கு வெளிப்படுத்தப்பட்டது தொடர்பான வழக்கு.

Foster Vs Bank of London (1862).

(£-532 பெறுமதியான உண்டியல் ஒன்றுக்கு £-104 குறைவாக கணக்கில் இருக்கிறது என்ற இரகசியம் வெளிப்படுத்தப்பட்டது)

26. இரகசியம் தொடர்பான ரோனியர் சட்டம் (Tournier Rule).

Tournier Vs. National Provincial & Union Bank Of England (1924)

27. வங்கியாளர் இரகசியம் தொடர்பாக 2005இல் திருத்திய சட்டம்.

வங்கியியல் சட்டம் 30 of 1988 பிரிவு 77 AMENDMENT - 2 of 2005 SECTION 34

28. வங்கியாளர் தெரிந்தோ தெரியாமலோ இரகசியத்தை வெளியிட்டால் வழங்கும் தண்டனை.

3 வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாவிற்கு மேற்படாத அபராதம்

29. 3 ஆம் தரப்பினருக்கு ஒரு வாடிக்கையாளரின் தகவல்களை வழங்குவதற்கு 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் அனுமதிக்கும் இரு சந்தர்ப்பங்கள்.

i. பணிப்பாளர், முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தரின் கடமைத்தேவையின் நிமித்தம் தகவல்களை வெளிப்படுத்த நேரிடும் போது

ii. வங்கிச் சட்டத்தில் உள்ள ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக அல்லது வேறு சட்டமொன்றின் தேவையை நிறைவேற்ற நேரிடும் போது

30. பாரதூரமான குற்றவியல் பற்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் CID கோரும் போது இரகசியத்தை வெளியிடலாம் என்பதற்கான வழக்கு.

BARCLAYS BANK VS TURNER (1989)

31. கறுப்புப் பணத்தை சட்டரீதியான பணமாக்குவதை தடுக்கும் கட்டளைச் சட்டம்.

The Prevention of Money Laundering Act No 5 of 2006

32. நிதிப்பரிமாற்ற முறைப்பாடுகள் கட்டளைச் சட்டம்.

Financial Transactions Reporting Act (FTRA) No 6 of 2006

33. தற்போது நடைமுறையில் உள்ள பொறுப்பேற்கத்தக்க வயதடைதல் கட்டளை சட்டம்.

AGE OF MAJORITY ACT No 7 OF 1865 AMENDMENT 17 of 1989

(21 வயதில் இருந்து 18 வயதாகக் குறைக்கப்பட்டுள்ளது)

34. அண்மையில் இலங்கை மத்திய வங்கியானது வெகுஜன ஊடகங்களில் சட்டத்திற்குப் புறம்பாக நடாத்தப்படும் நிதிநிறுவனங்கள் பற்றி குறிப்பாக ஒரு தனியார் ஆங்கில ஆசிரியரால் நடாத்தப்பட்ட நிதி நிறுவனம் பற்றி எச்சரித்த சட்டம்.

FINANCE COMPANIES ACT NO 78 OF 1988 AMENDMENT 42 OF 2011.

35. காலவரையறை விதித்தல் கட்டளைச் சட்டம் (PRESCRIPTION ORDINANCE).

PRESCRIPTION ORDINANCE NO 22 OF 1871 AMENDED BY - ORDINANCE NO : 2 OF 1889

1. ஈட்டுமுறி - 10 வருடங்கள் 2. தற்கால மேலதிகப் பற்று - 3 வருடங்கள்

3. உத்தரவாத முறி - 6 வருடங்கள் 4. மாற்றுண்டியல் - 6 வருடங்கள்

36. அடகு பிடிப்போர் கட்டளைச்சட்டம் 90 இற்கு ஒத்திசைவாக தற்போது நடைமுறையில் உள்ள சட்டம்.

வங்கியியல் சட்டம் 30 OF 1988 ACT NO . 33 OF 1995

37. கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய சட்டம் (ABANDONED PROPERTY).

வங்கியியல் சட்டம் 30 OF 1988 பிரிவு 72, 73, 74,75

பிரிவு -72, (A) 10 வருடங்கள் அல்லது மேலதிகமான காலத்திற்கு எதுவித கொடுக்கல் வாங்கலும் தொடர்புகளும் இல்லாது காணப்படும் கணக்குகள்.

(B) வாடகைக் காலம் முடிவடைந்து மூன்று வருடங்கள் எதுவித தொடர்பும் இல்லாதநிலையில் இருக்கும் பாதுகாப்புப் பெட்டக வசதி (SAFE CUSTODY LOCKER)

பிரிவு 73. ஒரு விஷேட கணக்கிற்கு மாற்றவது பற்றியது.

பிரிவு 74. வாடிக்கையாளருக்கு தெரியப்படுத்துவது

பிரிவு 75. மத்திய வங்கியினால் மீள செலுத்துவது தொடர்பானது.

38. இலங்கையில் பொதுவான சட்டம் (COMMON LAW).

றோமன் டச்சு சட்டம் (ROMAN DUTCH LAW)

39. இலங்கையில் ஆள்சார் பற்றிய சட்டங்கள் (PERSONAL LAW).

1. தேசவழமைச் சட்டம் ( Thesawalamai Law)

2. கண்டிய சட்டம் (KANDIAN LAW)

3. முஸ்லீம் சட்டம் (MUSLIM LAW)

40. இலங்கையில் அதியுயர்ந்த மற்றும் இறுதி மேன்முறையீட்டு நீதி மன்றம்.

உயர் நீதி மன்றம் (Supreme Court)

41. கணவன் இறக்குமிடத்து சொத்துக்களைப் பகிர்தல்.

1. தேசவழமைச் சட்டம் : மனைவிக்கு அரைப் பங்கு, மிகுதி அரைப் பங்கு மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படும்.

2. கண்டிய சட்டம் : மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சமஅளவு பங்கு

3. முஸ்லீம் சட்டம் : மனைவிக்கு 3/24 பங்கு, மகனுக்கு 14/24 பங்கு
மகளிற்கு 7/24 பங்கு

42. கம்பனி தொடர்பான முதல் வழக்கு.

SALOMON VS SALOMAN & Co (1897)

43. கம்பனி தொடர்பான புதிய சட்டம்.

புதிய கம்பனிச் சட்டம் 7 OF 2007

44. கம்பனிப் பணிப்பாளர்களதும் செயலாளரிதும் விபரங்கள் அடங்கிய படிவம்.

படிவ இலக்கம் 20 (FORM NO 20)

45. கம்பனிக்கு கடன் வழங்கும் போது வங்கியினால் பெறப்பட வேண்டிய முக்கிய ஆவணம் வெளிப்படுத்தல் படிவம் - படிவ இல . 751

46. புதிய கம்பனிச் சட்டத்தின்படி கம்பனிக்கு கணக்கு ஆரம்பிக்கும் போது தேவைப்படாத ஆவணம்.

அமைப்பு புறவிதி

47. கம்பனியினால் வழங்கப்பட்ட காசோலைக் கொடுப்பனவை இடைநிறுத்தும் அதிகாரம் உள்ளவர்.

கம்பனியின் செயலாளர்

48. வரையறுக்கப்பட்ட கம்பனி அதன் ஒடுக்கல் பற்றி அறிவித்தால் இடப்பட வேண்டிய மறுத்தல் குறியீடு.

DRAWERS MANDATE INOPERATIVE BY LAW

49. ஒரு கம்பனியை முடிவுக்கு கொண்டு வரும் (WINDING UP) செய் ஒழுங்குகள்.

1. நீதி மன்றத்தால் முடிவுக்கு கொண்டு வரல்
2. தன்னிச்சையாக முடிவுக்கு கொண்டு வரல்
3. நீதி மன்ற முன்னிலையில் முடிவுக்கு கொண்டு வரல்.

50. பங்குடமைக் கணக்கில் ஒருவர் இறந்தால்,

வரவு மீதி :- (CREDIT BALANCE) மூடும் நோக்குடன் கணக்கை தொடர்ந்து நடத்தலாம். (பங்குடமைக் கட்டளைச் சட்டம் 1890 பிரிவு 38)

செலவு மீதி :- (DEBIT BALANCE) கணக்கு உடன் நிறுத்தப்பட வேண்டும். தவறின் கிளேட்டன் விதி (CLAYTON'S RULE) தொழிற்பட்டு சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்தும்

51. பங்குடமைக் கணக்கொன்று மூடப்படுவதற்கான சந்தர்ப்பங்கள்.

1. ஒரு பங்காளரின் இறப்பு
2. பங்குடமையைக் கலைத்தல்
3. பங்குடமை வங்குரோத்து நிலையை அடைதல்

52. பிரதி விம்பத்தீர்வு முறையில் தற்போது நடைமுறையில் உள்ளது.

T + 1. ( T= இன்று 1 = அடுத்த வேலை நாள்)

53. பிரதி விம்பத் தீர்வு முறையில் அறிமுகப்படுத்திய புதிய காசோலை.

சிநேக பூர்வ பிரதிவிம்ப காசோலை. (IMAGE FRIENDLY CHEQUE)

54. கொடுகடன் தகவல் பணியகம் தொடர்பான (CRIB) இலங்கைச்சட்டம்.

Sri Lanka Act No : 18 of 1990

55. வாடிக்கையாளர் மீதான வங்கியாளரின் அபிப்பிராயத்தை (Opinion) வங்கி வழங்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய வாசகம்.

" எம் பக்கம் ஏதும் பொறுப்பின்றி " (Disclaimer Clause)

56. CRIB REPORT இல் நிறங்கள் குறிப்பவை.

1. சிவப்பு 90 நாட்களுக்குக் கூடியவை
2. மஞ்சள் 90 நாட்களுக்குக் குறைந்தவை
3. பச்சை NO OVER DUE காலம் கடந்தவையல்ல
4. நீலம் (PEACOCK BLUE) - சர்ச்சைக்குரிய கடன் வசதி DISPUTED CREDIT FACILITY

57. கைமாறும் சாதனங்கள் (NEGOTIABLE INSTRUMENTS).

1. காசோலை - (CHEQUE)
2. மாற்றுண்டியல் - (BILL OF EXCHANGE)

3. வாக்குறுதிப் பத்திரம் - (PROMISSORY NOTE)

4. திறைசேரி உண்டியல் - (TREASURY BILL)

58. கை மாறாத சாதனங்கள் (NON NEGOTIABLE INSTRUMENTS).

1. காசுக்கட்டளை - MONEY ORDER

2. அஞ்சல் காசுக் கட்டளை - POSTAL ORDER

3. நிரந்தரவைப்பு - FIXED DEPOSIT

4. பங்குச் சான்றிதழ் - SHARE CERTIFICATE

5.சேமிப்புச் சான்றிதழ் - SAVINGS CERTIFICATE

59. புதிதாக நடைமுறைக்கணக்கை ஆரம்பிக்கும் போது ஆரம்ப வைப்பு எவ்வகையில் இருக்க வேண்டும்.

1. காசு மூலம் ஆரம்பிக்க முடியும்.

2. வாடிக்கையாளரின் பெயரில் ஒரு நடைமுறைக்கணக்கை ஆரம்பிப்பதற்கென விஷேட மான அறிவித்தலுடன் வங்கிக்கு வரையப்படும் காசோலை.

60. வங்கி உத்தரவாதம் (BANK GUARANTEE).

ஒரு கடனாளியின் பொறுப்பைத் தீர்க்கும் உறுதிமொழியாகும் கடனாளி தனது பொறுப்பிலிருந்து தவறும்போது பாதிக்கப்பட்ட நன்மை பெறுவர் குறிப்பிட்ட தொகையைக் கோரும் போது உத்தரவாதியான வங்கி உத்தரவாதம் அளித்த தொகைக்குள் செலுத்துதல் ஆகும்.

61. வங்கி வழங்கும் உத்தரவாதத்தில் சம்பந்தப்பட்ட பகுதியினர்.

1. உத்தரவாதி - பிணையக் கடிதத்தை வழங்கும் வங்கி

2. முதல்வர் - வாடிக்கையாளர்

3. நன்மை பெறுபவர் - நன்மை பெறும் மூன்றாம் நபர்

62. பொதுவாக வங்கி வழங்கும் பிணையக் கடிதங்கள்.

1. கடன் கொள்வனவு உத்தரவாதம் (Credit Purchase Guarantees)

2. கேள்வி உத்தரவாதம் (Bid Bond)

3. செயல் நிறைவேற்று உத்தரவாதம் (Performance Bond)

4. சுங்கத் தீர்வை உத்தரவாதம் (Customs Duty Bond)

5. கப்பலேற்றல் உத்தரவாதம் (Shipping Guarantee)

6. முற்கொடுப்பனவு உத்தரவாதம் (Advance Payment Guarantee)

7. தடுத்து வைத்தல் உத்தரவாதம் (Retention Guarantee)

8. பராமரிப்பு உத்தரவாதம் (Maintenance Guarantee)

63. உத்தரவாதத்தில் சம்பந்தப்பட்ட பகுதியினர்.

1. கடனாளி - Borrower

2. வங்கி - Bank

3. உத்தரவாதி - Guarantor

64. பராயமடையாதோர் (Minor) உத்தரவாதம் வழங்க முடியாது.

Coutts & co Vs Browne Lecky Others (1947)

65. Beneficium Ordinis Division Executionis (பெனிவிசியும் ஓடினிஸ் டிவிஷன் எக்ஸ்சிகியூனிஸ்) என்ற வசனத்தின் கருத்து.

பிரதான கடனாளிக்கு முதலில் வழக்குத் தாக்கல் செய்து பின்னர் பிணையாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் உரிமையைக் குறிக்கின்றது.

66. நான்கு நபர்கள் உத்தரவாதம் அளிப்பதாக இணங்கி அதில் மூன்று நபர்கள் கையொப்பம் இட்டுள்ளனர். நான்காவது நபர் கையொப்பம் இடமுன்னர் முற்பணத்தை வங்கி வழங்கினால் - உத்தரவாதிகளின் நிலை.

முன்னைய மூவரும் உத்தரவாதத்தில் இருந்து விடுவிக்கப்படுவர்.

National Provincial Bank of England Vs Brackenbury (1906)

67. உத்தரவாத முறியில் ( Guarantee Bond) உள்ள முக்கிய வாசகங்கள்.

1. தொடர்ச்சியான பிணை (Continuing Security)

2. தனித்தும் ஒருமித்தும் (Joint and Several)

3. கிளேட்டன் விதி (Clayton's Case)

4. முழுக் கடனுக்குமான உத்தரவாதம் (Whole Debt)

5. காலவரையறைச் சட்டம் (Prescription Period)

6. உத்தரவாதத்தில் இருந்து விலகுதல் (Determining Guarantee)

68. உத்தரவாத முறியில் மறுதலித்து நிற்கும் வாசகங்கள்.

1. காலவரையறைச் சட்டம்

2. கிளேட்டன் விதி

3.உரோம ஒல்லாந்துச் சட்டம்

69. அசையாச் சொத்தில், ஈட்டின் பிரிவுகள்.

1. சட்டரீதியான ஈடு (Legal Mortgage)

2. நியாயாதிக்க ஈடு (Equitable Mortgae)

70. நியாயாதிக்க ஈடானது சட்டரீதியான ஈடாக மாற்றும் போது பயன்படுத்தப்படும் ஆவணம்.

எழுத்திலான வைப்பிடும் அறிக்கை (Written Memorandum of Deposit)

71. தேசவழமைச் சட்டத்தின்படி முதுசம், சீதனம், தேடிய தேட்டம் ஆகியவற்றின் கருத்துக்கள்.

1. முதுசம் - கணவன் வழி வந்த மரபுரிமைச் சொத்துக்கள்

2. சீதனம் - மனைவியின் தாய் வழிவந்த மரபுரிமைச் சொத்துக்கள்

3. தேடிய தேட்டம் - கணவனும் மனைவியும் தங்கள் மணவாழ்வின் போது தேடிக் கொண்ட சொத்துக்கள்.

72. ஆயுட் காப்புறுதிப் பத்திரத்திற்கு (Insurance Policy) எதிராக கடன் வழங்கும் போது சொத்து உரிமை மாற்றப் பத்திரம் (Deed of Assignment) பதிவு செய்ய வேண்டிய இடம்.

காணிக் கந்தோரில் அசையும் சொத்துப் பிரிவில் பதிவு செய்ய வேண்டும்.

73. கீழ்வருவன பதிவு செய்ய வேண்டிய இடங்கள்,

1. அசையாச் சொத்து ( Property) : - குறிப்பிட்ட காணிப்பதிவகத்தில் அசையாச் சொத்துப் பிரிவில் பதிவு செய்ய வேண்டும்.

(முதற்பதிவுக்கே முன்னுரிமை ஈட்டுச் சட்டம் 23 of 1927 Section 7(2)

2. வியாபார இருப்பு (Stock in Trade) குறிப்பிட்ட காணிப் பதிவகத்தில் அசையும் சொத்துப் பிரிவில் 21 நாட்களுக்குள் பதிய வேண்டும்.

(ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் இருப்புக்கள் இருக்குமாயின் பதிவாளர் நாயகத்தில் (Rregister General) பதிவு செய்ய வேண்டும்).

3. வாகனம் (Vehicle) :- குறிப்பிட்ட காணிப்பதிவகத்தில் பதிய வேண்டும். மோட்டார் வாகன பதிவாளர் நாயகம் R.M.V இலும் பதிய வேண்டும். இரவில் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் தரித்து நிற்குமாயின் பதிவாளர் நாயகத்திடம் பதிவு செய்ய வேண்டும்.

74. இணக்கசபையில் (Mediation Board) முறையீடு செய்யக்கூடிய உச்சத்தொகை.

500, 000/=

Mediation Board Act No: 72 of 1988 Amended 4 of 2011 - 250, 0000/=

Mediation Board Act No: 72 of 1988 Amended 9 of 2016 - 500, 000/=

75. காலஞ்சென்றநபர்களின் கணக்குகளில் நிலுவைகளை வங்கி விடுவிப்பதில் ஆகக்கூடிய தொகை

4 மில்லியனும் அதற்கு உட்பட்ட தொகையும்.

76. புதிய கடன் அறவிடல் சட்டத்தின் படி பராட்டே (Parate) நடவடிக்கையை நிறைவேற்றக் கூடிய தற்போதைய தொகை.

5 மில்லியனும் அதற்கு மேற்பட்ட தொகையும்

புதிய கடன் அறவிடல் சட்டம் 4 of 1990 Amended 1 of 2011 பிரிவு 5 A

(5 மில்லியனுக்கு குறைவாயின் எந்த ஒரு கடனையும் அறவிட ஆரம்பித்தலாகாது).

புதிய கடன் அறவிடல் சட்டம் 4 of 1990 Amended 19 of 2011 பிரிவு 5 A

(5 மில்லியனுக்கு மேல் பெற்ற முதல் தொகை மீளச் செலுத்த தவறும் போது பராட்டே நடவடிக்கை எடுக்க முடியும்).

77. A. காணிக் கொள்வனவு (Land Purchase) முத்திரைத் தீர்வை (Stamp Duty).

ஒரு இலட்சம் வரைக்கும் (100,000/=) - 3000/=

அடுத்து வரும் ஒவ்வொரு இலட்சத்திற்கும் - 4000/=

B.சீதனம் / நன்கொடை (Dowry / Donation)

ஒரு இலட்சம் வரைக்கும் (100,000/=) 2% + 500 = 2500/=

அடுத்து வரும் ஒவ்வொரு இலட்சத்திற்கும் - 2%

78. இறந்தவரின் இறுதி விருப்பாவணம் (Last Will) ஊடாக அவரது சொத்துக்களை பராமரிப்பதற்கு நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுவர்

நிறைவேற்றுனர் (Executor)

79. ஒருவர் இறுதி விருப்பாவணம் இல்லாது இறக்கும் போது அவருடைய சொத்தினை பராமரிப்பதற்கு நீதிமன்றம் ஊடாக நியமிக்கப்படுவர்.

நிர்வாகி (Administrator)

80. நியமனம் (Nomination) வழங்க தகுதியுடைய வயது - 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் எவரையும் நியமனம் செய்ய முடியும்.

Civil Procedure Code (Amendment) Act No : 14 of 1993 Section 544 (1)

81. கணவனும் மனைவியும் கூட்டாக நடைமுறைப்படுத்தும் சேமிப்புக்கணக்கில் (Joint Account) கணவன் இறந்து விட்டால்,

பிழைத்திருப்போன் விதியின் படி (Rule of survivorship) மனைவிக்கே நிலுவை சென்றடையும். Russell Vs Scott (1936)

82. ஒரு பௌத்ததுறவி இறக்கும் போது ஆளுகை செய்யும் சட்டம்

பௌத்தமத ஸ்தாபனத்தின் சொத்துக் கட்டளைச்சட்டம் Section 23 Caption 318.

83. கேவியற் (Caveat) என்பது

காணி தொடர்பான சட்டபிரிவு 32D Caption 112 இன் பிரகாரம் காணியை இன்னொருவருக்கு மாற்றுவதை தடை செய்யும் சட்டமாகும்.

84. Concurrent Mortgage

ஒரு ஆதனத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட வங்கிகள் ஒரே காலத்தில் கடன் வழங்குவதைக் குறிக்கும். இங்கு விஷேடமாக Equal And Pari Passu என்ற வாக்கியம் அமையும்.

85. Condominium Mortgage

APARTMENT OWNER SHIP LAW NO.11 OF 1973 இன்படி ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறு உரித்து உறுதிகள் வழங்கப்படும். சாதாரணமாக ஒரு காணி 4 திசைகளை குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கும் இங்கு மேலதிகமாக மேலும் கீழும் (Upper And Lower) என்றும் குறிப்பிடப்படும்.

86. மதிப்பீட்டு அறிக்கையில் (Valuation Report) வங்கியாளர் கருத்தில் கொள்ள வேண்டியவை.

i. சந்தைப் பெறுமதி - (Market Value)
ii. கட்டாய விற்பனை பெறுமதி - (Forced Sale Value)
iii. காப்புறுதிப்பெறுமதி - (Insurance Value)

87. வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களினால் வாடிக்கையாளருக்கு பாதிப்பு ஏற்படும் இடத்து தமது குறைபாடுகளை பதிவு செய்து கொள்ள வேண்டிய அதிகாரி.

நிதியியல் குறைகேள் அதிகாரி (Financial Ombudsman)

88. செயற்படாத கடன்கள் (Non - Performing Advances) தொடர்பான சட்டங்கள்

i. Debt Recovery Act No 2 of 1990 Amended 9 of 1994
ii. Mortgage Amendment Act No: 3 of 1990 (Special Declaration Section.47A)
iii. Recovery of loans By Bank Act No: 4 of 1990Amended -Act No : 24 of 1995.

89.செயற்படாத கடன்கள், முற்பணங்களின் NPA வகைப்படுத்தல் கூற்று (Classification of NPA)

| Categories | Arrears Principal | Provision % Net of Realizable Securities |
|---|---|---|
| 1.Special Mention (overdue) | 90 to 180 Days | - |
| 2. Sub Standard | 180 to 360 Days | 20% |
| 3.Doubtful | 360 to 540 Days | 50% |
| 4.Loss | Over 540 Days | 100% |

90. Hair Cut Provision இன்கடன் நட்ட ஒதுக்கீட்டு வீதம்.

1. 6 Months to 30 Months - 75%
2. 30 Months to 42 Months - 60%
3. 42Months to 54 Months - 50%
4. 54Months to 66 Months - 40%

91. கீழ் வருவனதொடர்பில் பெறப்பட வேண்டிய காப்புறுதிகள்.

i. அசையாச் சொத்து (Immovable Property) Fire Policy
ii. இருப்பு - (Stock) Fire & Burglary Policy
iii. வாகனம் - (Vehicle) Comprehensive Insurance Policy

92. நாணயக் கடிதமொன்றின் முக்கிய தரப்பினர்.

1. நன்மை பெறுபவர் (Beneficiary)
2. விண்ணப்பதாரி (Applicant)
3. வழங்கும் வங்கி (Issuing Bank)
4. அறிவுறுத்தும் வங்கி (Advising Bank)
5. நியமிக்கப்பட்ட திகதி (Nominated Bank)

93. நாணயக் கடிதம் வழங்கும் போது வங்கி எதிர்கொள்ளும் இடர்கள்.

i. கடன் இடர் - (Credit Risk)
ii. அரசியல் இடர் - (Political Risk)
iii. செயற்பாட்டு இடர் - (Operation Risk)
iv. ஆவண மோசடி - (Documentary Fraud)
v. சட்ட ரீதியான இடர் - (Legal Risk)

94. மாற்றுண்டியலின் வகைகள் (Types of Bill of Exchange).

1. உடன் உண்டியல் - (Sight Bill)
2. தவணை உண்டியல் - (Term Bill)

95. சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதியாளருக்கு வழங்கும் கடன் வசதிகள்.

i. கப்பலில் ஏற்ற முன்னரான கடன் - Pre Shipment
  a சிவப்பு நிற நாணயக்கடிதம் - Red Clause Documentary Credit
  b. பொதியிடல் கடன் - Packing Credit
ii. கப்பலில் ஏற்றிய பின்னரான கடன் - Post Shipment
  a ஆவணங்கள் கழிவிடல் - (Bill Discounting)
  b ஆவணங்கள் இணங்கல் செய்தல் - (Bill Negotiation)
iii. மேலதிகப்பற்று வசதிகள் - Overdrafts Facility

96. சர்வதேச வர்த்தகத்தில் கொடுப்பனவு முறைகள்.

1. திறந்த கணக்கு (Open Account)
2. முற்பணக் கொடுப்பனவு (Advance Payment )
3. நாணயக் கடிதம் (Letter of Credit)
4. ஆவண சேகரிப்பு `(Documentary Collection)
5. வங்கிக் கொடுப்பனவுக் கடப்பாடு (Bank Payment Obligation)

97. சர்வதேச வர்த்தகத்தில் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ள ஏற்றுமதியாளர் ஒருவருக்கான பாதுகாப்பான வழிமுறை.

முற்பணக் கொடுப்பனவு முறை (Advance Payment)

98. சர்வதேச வர்த்தகத்தில் இறக்குமதியாளருக்கு வழங்கும் கடன்கள்.

i. நம்பிக்கை சீட்டுக்கடன் - (Trust Receipts Loan)
ii. அடைமானக்கடன் - (Hypothecation Loan)
iii. அடகுக்கடன் - (Pledge Loan)
iv. ஆவணக்கடிதம் - (Documentary Credit)

99. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் நியம முறைகள்.

i. நாணயக்கடிதத் தொழிற்பாடு - UCP - 600
ii. திரட்டலுக்கான விதிகள் - URC - 522
iii. வங்கிகளுக்கிடையிலான மீள் கொடுத்தலுக்கான விதிகள் - URR - 725

100. கப்பலேற்றல் பத்திரத்தின் (Bill Of Lading) பண்புகள்.

i. பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி

ii. கொண்டு செல்வதற்கான ஒப்பந்தம்

iii. உரித்தாவணப் பத்திரம்

101. முன்மாற்று செலாவணி ஒப்பந்தத்தின் வகைகள் (Types of Forward Exchange Contract).

i. நிலையான முன்மாற்று - (Fixed Contract)

ii. விருப்பத்திற்குரிய முன்மாற்று - (Option Contract)

iii. நிலையானதும் விருப்பத்திற்குரியதுமான முன்மாற்று - (Fixed Cum Option Contract)

102. D/P, D/A என்பவற்றின் விரிவாக்கம்.

D/P - Documents Against Payment (கொடுப்பனவிற்கு எதிரான ஆவணங்கள்)

D/A - Documents Against Acceptance (ஏற்றுக் கொள்ளலுக்கு எதிரான ஆவணங்கள்)

103. U.C.P 600 விதிகளில் உள்ள மொத்த உறுப்புரைகள்.

மொத்த உறுப்புரைகள் 39

104. U.C.P 600 உறுப்புரைகளில், மாதத்தின் நடுப்பகுதி (Middle Of The Month) என்பதைக் குறிப்பிடும் திகதி அம்மாதத்தில் எதில் தொடங்கி எதில் முடியும்.

11 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை.

105. தற்போது நடைமுறையில் உள்ள INCO TERMS 2010 இல் உள்ள குறியீடுகள்.

11 (Eleven)

106. சர்வதேச வர்த்தக நியதிகளின் பிரிவுகள் (ஒவ்வவொரு முதல் எழுத்திலும் தொடங்குபவை - (INCO TERMS GROUP).

E - Departure
F - Main Carriage Unpaid
C - Main Carriage Paid
D - Arrival

107. INCO TERMS விதிகளில் தொடக்கத்தில் உள்ள “C” என்ற எழுத்து குறித்து நிற்பது.

காவிச் செல்லும் கட்டணம் அல்லது விலை

108. INCO TERMS குறியீடுகளில் குறிப்பிடப்படும் இடங்கள்.

1. EXW - EX Works (Named Place)
2. FCA - Free CArrier (Named Place)
3. FAS - Free Alongside Ship (Named Port of Shipment )
4. FOB - Free On Board (Named Port of Shipment)
5. CFR - Cost and FReight (Named Port of Destination)
6. CIF - Cost Insurance and Freight (Named Port of Destination)
7. CPT - Carriage Paid To (Named Place of Destination )
8. CIP - Carriage and Insurance Paid to (Named Place of Destination)
9. DAP - Delivered At Place (Named Place)
10. DAT - Delivered At Terminal (Named Terminal)
11. DDP - Delivered Duty Paid (Named Place of Destination)

109. காசோலையில் தொகை £-2 , தொகை £-120 ஆக மாற்றப்பட்ட வழக்கு.

London Joint Stock Bank Vs Macmillan & Arthur (1918)

110. கிளேட்டன் விதியின் ஆரம்ப வழக்கு.

Devaynes Vs Nobel (1816)

111. வங்கி ஒன்றின் கிளைகள் தனித்தனிக் கிளைகளாகவே கருதப்படும்.

Prince Vs Oriental Bank Corporation (1878)

112. கிரமமான முறையில் வங்கியில் சேவையைப் பெற்று வந்தாலும் வாடிக்கையாளராக கருத முடியாது எனத் தீர்ப்பிடப்பட்ட வழக்கு.

Great Western Railway Co Vs London County Banking Co - (1901)

113. Basel 11 இன் இடர்கள் (BASEL 11 RISK).

i. Market Risk - சந்தை இடர்
ii. Operational Risk - செயற்பாட்டு இடர்
iii. Credit Risk - கடன் இடர்

114. BASEL 11 இன் 3 கட்டமைப்புக்கள் (Three Pillars).

. i. மூலதன போதுமாந் தன்மையின் தேவைப்பாடுகள் (Minimum - Capital Requirement)
ii. மேற்பார்வை மீளாய்வு செய்தல் (Supervisory Review)
iii. சந்தைசார் ஒழுக்கம் (Market Discipline)

115. மேலதிகப்பற்றின் வகைகள் (Types of Over Draft).

i. Permanent Over Draft - (பிணையங்களுக்கு எதிராக)
ii. Temporary Over Draft - (வாடிக்கையாளரின் எழுத்து மூலக் கோரிக்கை)
iii. Casual Over Draft - (வாடிக்கையாளரின் வேண்டுகோள் இல்லாமல்)

116. தற்காலிக மேலதிகப்பற்று அல்லது (Casual Over Draft) எத்தனை - நாட்களுக்குப்பின் N.P.A க்கு மாற்றப்படும்.

90 நாட்கள்

117. கடன் செலுத்தி முடிக்கப்பட்ட பின் அது தொடர்பான ஆவணங்களை வங்கி பேண வேண்டிய காலம்.

6 மாதங்கள்

118. ஐக்கிய இராச்சியத்தில் (U.K) கூடிய பெறுமதி உள்ள நாணயத்தாள்.

£ 50

119. தத்துவ அதிகாரம் (Power Of Attorney).

இரண்டு வகைப்படும் 1 குறிப்பானது - (Specific)
2. பொதுவானது - (General)

120. கீழ்வருவனவற்றை கணிக்கும் முறைகள்.

1. NPA RATIO $= \dfrac{\text{Total NPA}}{\text{Total Advance}} \times 100$

2. Credit Deposit Ratio $= \dfrac{\text{Total Advance}}{\text{Total Deposit}} \times 100$

3. Cost Of Fund $= \dfrac{\text{Financial Cost + Administrative Cost (80\%)}}{\text{Loneable Fund}} \times 100$

121. காணிஷிக்கட்டளை (Garnishee Orders) தொடர்பானவை.

சேமிப்புக் கூட்டுக்கணக்கில் தனிப்பட்ட ஒருவரின் பெயரில் முடக்கும் கட்டளை கிடைக்கும் இடத்து,

ஒதுக்கம் செய்ய முடியாது. (Hirschorn Vs Evans Barclays Bank)

ஆனால் கூட்டுக்கணக்கில் தனிப்பட்ட ஒருவரின் பெயருடன் கணக்கு இலக்கமும் குறிப்பிட்டிருந்தால் ஒதுக்கம் செய்ய முடியும்.

122. கூட்டு நிலையான வைப்புக்கணக்கில் ஒருவரின் பெயரில் முடக்கும் கட்டளை கிடைக்கும் இடத்து ஒதுக்கம் செய்ய முடியாது.

Bagley Vs Winsome & National Provincial Bank (1952)

123. கடன் வழங்கும் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்.

1. Character - நிதிப்பல ஒழுக்கம்
2. Capacity - மீளச் செலுத்தும் நிதி ஆற்றல்
3. Capital - மூலதனம்
4. Condition - நிபந்தனை
5. Collateral - பிணைகள்
6. Cash Flow - நிதிப்பாச்சல்

124. கம்பனிக்கு கடன் வழங்கலில் கவனிக்க வேண்டியவை - (Five Pillars).

| | |
|---|---|
| i. Market Condition | சந்தை நிலவரம் |
| ii. Industry Company Position | கம்பனி நிலவரம் |
| iii. Company Financial Condition | கம்பனி நிதி நிலை |
| iv. Management Quality | முகாமைத்துவ தராதரம் |
| v. Collateral Quality | பிணையங்களின் தரம் |

125. கீழ் வருவனவற்றின் விரிவாக்கம்.

| | | |
|---|---|---|
| i. | LIBOR | - London Inter Bank Offer Rate. |
| ii. | SLIBOR | - Sri Lankan Inter Bank Offer Rate |
| iii. | MICR | - Magnetic Ink Characters Recognition |
| iv. | PIN | - Personal Identification Number |
| v. | SLIPS | - Sri Lanka Inter Bank Payment System |
| vi. | RTGS | - Real Time Gross Settlement |
| vii. | SWIFT | - Society For World Wide Inter Bank Financial Telecommunication |
| viii. | ICC | - International Chamber of Commerce |
| ix. | INCO term | - International Commercial Term |
| x. | UCP | - Uniform Customs and Practice |
| xi. | URC | - Uniform Rules for Collections |
| xii. | URR | - Uniform Rules for Reimbursement (Bank to Bank) |

P. Francis
Retired Branch Manager
Bank of Ceylon

## கிரிபண்டாவின் பகிடிகள் (பாகம் II)

திரு. கிரிபண்டா அவர்களை வேலை கற்றுக்கொள்ளும் நிமித்தம் மாத்தளை BOC Bank Main Branch லிருந்து முகாமையாளர் தனது காரில் ஏற்றிச் சென்று கச்சேரியில் அமைந்துள்ள எமது BOC Kachcheri Branch இல் விட்டு வருவது வழக்கம். அப்பொழுது அங்கு O.I.C ஆக இருந்தவர். MRS.Soma Ekanayake ஆவார். இவருக்கு வேலைகளை கற்றுக்கொடுத்து பி.ப 4.00 மணியளவில் மீண்டும் கிரிபண்டாவை Safe பூட்டியபின் அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்து வந்தது. இவ்வாறு ஒரு சில மாதங்கள் போனபின் ஒரு நாள் வழமை போல முகாமையாளர் அமரர். சிவகணநாதன் இவரை கச்சேரிக்கு தனது Carல் அழைத்துப்போகும் வழியில் பின்வரும் கேள்விகளை கேட்டிருந்தார்.

1) Mr. Kirubanda, can you work independently Now, without the assistance of your supervisor MRS. Soma Ekanayake ?

   **Yes.**

2) Can you Balance the cash at the end of the day without any error and do you know as to how the cash Bundles are properly made?

   **Yes.**

3) If I remove the other Clerk can you manage alone?

   **Yes**

4) Shall I remove the other person from today?

   **Yes.**

கச்சேரிக்கிளையை அடைந்ததும் திரு. சிவகணநாதன் Supervisor MRS.Soma Ekanayake உடன் பின்வருமாறு கலந்துரையாடியிருந்தார். MRS. Soma Ekanayake! I am facing staff Problem at the main Branch. Therefore I am removing the Other Person today itself leaving Kirubanda alone here

MRS. Soma Ekanayake replied

1. அனே எப்பா ("Oh No!" please Don't even think about this)
2. எயா மோடயா (He is a fool) எயாட்ட
3. கரியட்ட லியண்டவத் தன்னா (He does not Know even to Write receipts Properly)

Manager: He says that he can manage everything alone and agreed to remove the other clerk.

Then MRS. Soma Ekanayake asked kiribanda

4.அனே கிரிபண்டா ஒயாட்ட தனியமா கச்சேரி Branch வட manage கரண்ட புழுவண்ட? (Can you manage the Kachcheri branch Work alone?)

5.Kiribanda :- அனே பா(ba) (Oh I can't )

6.mrs. ekanayaka :- எதாக்கொட்ட manaeger மகத்மெயட்ட, ஒயாட்ட ஒக்கம தனியம Manage கரண்ட புழுவன் கியல தியனவா)

(Then you have told our manager that you can mange everything alone )

7.Kiribanda:- அனே நோனா மம மொனவ கரண்டத? மம car எகே எனகொட்ட மகத்மயா இங்கிலீசியன் கொடக் அகுவா, மாத் ஒகொட்டமா yes கியல கியுவா!

8.Mrs. Ekanayaya:- ஐ ஏம கிவே (Why did you Say So?)

9.kiribanada : அனே நோனா! லொக்குமினிசு மொனஹுரி அகனகொட்ட No கியன ஏக கொந்த நா! நேதா? ஏநிசாத்தமாய் மம ஒக்கொட்டம Yes! Yes! Yes! கியல கீவே

MRS. Soma Ekanayake replied

1. අනේ ඒපැ
2. ඒයා මෝඩයා
3. ඒයැධ ලියණ්ධබත් දන්නෑ
4. අනේ කිරිබණ්ඩා ඔයාට තනියම කච්චේරි වැඩ manage කරන්ඩ පුලුවන්දෑ? (Can you manage the Kachcheri branch Work alone?)
   Karaganda :-
5. අනේ බෑ
6. එතැකොට මගත්මයාට ඔයාට ඩක්කම තනියම Manage කරන්ට පුලුවන් කියළ කිවද?
7. අනේ නෝනා, මම මොනව කරන්ටදෑ? මම car එකේ එනකොඩ මගත්මයා ඉන්කිරීඑයන් කොටක් අගුවා මගත් ඔක්කොටම කියළ yes! Yes! Yes! කියූවා!
   Mrs. Ekanayaya:-
8. අං ඒම කීවේ?
9. kiribanada:- අනේ නෝනා! ළොකුමිනිසු මොනගරි අකැනකොට No කියන එක ගොංද ණෑ නෙතෑ? ඒනිසැත්තමැය් මම ඩකට්ටම Yes! Yes! Yes! කියළ කිවේ

Looking at the manager, Mrs. Ekanayaka explained the story behind to him

The manager was full in laugh together with other employees and kachcheri staff

Ultimately both kiribanda and Mr.K.sivakananathan (the manager) came to a M.O.U, that from that day onwards they agreed to speak in **Tamil** since kiribanda was able to speak and understand Tamil language well , as he was living in a tea estate' and associating with Tamil speaking people

Then everything was going on smoothly and kiribanda was allowed to continue at

Kachcheri Branch for a period of another two months and was to be transferred to main Branch, Subsequently.

N. Sivaratnam

Former A.G.M

## சொல்வதிலும் கவனம் வேண்டும்!

இடம் விட்டு மக்கள் எல்லாம்
தென்மராட்சி போகும் போது
இரவினைக் கழிப்பதற்கு இந்த அப்பாவிக்கு
இடம் ஏதும் கிடைக்கிவில்லை
அடித்து ஊற்றும் மழையில் தோய்ந்தான் காளை
அவனுக்கு அறிமுகமானோர் யாருமில்லை
ஒரு வீடு சென்று " இரவு இங்கு நானும்
படுத்திட்டுப் போகப்போறேன்" என்றான்
"குமர் ஒன்று இங்கு இருக்குதடா நீயும்
ஓடடா தூர" என்று அதட்டினார்கள்
மற்றுமோர் வீடு நண்ணியவன்
மாட்டுக் கொட்டிலில் தங்கிவிட்டு
மறுநாள் விடியவே போறேன் என்றான்
குமர் இரண்டு இங்கே உண்டு மூடா
போடா நீ வீட்டை விட்டு என்றனர்
அடுத்த வீட்டை அடைந்தவனும்
"குமர் ஏதும் இங்கு இருக்கோ? என்றான்
இரவு இங்கு படுத்திடக் கேட்டேன்" என்றான்
அடித்தனர் அயலார் கட்டி வைத்து
அவன் மண்டை பிளந்து போச்சு

விகடகவியின் கவிதைகள் 31.10.2001

# வட மாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் நிதித் துறையினரின் அதிகரித்த செயல்பாடுகள்

## சாதகமா? பாதகமா?

## 15.01.2017 ல் நடைபெற்ற பட்டிமன்றம்

வட மாகாணத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கால அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம்.

கடந்த மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற யுத்தத்திற்கு முன்னரான காலப் பகுதி எனவும் அதற்குப் பின்னரான காலப்பகுதீ என்றும் பிரிக்கலாம்.

ஒரு குடும்பம், கிராமம் அல்லது நகரம் அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் நிதி அத்தியாவசியம் ஆகின்றது.

நிதியை நிர்வகிக்க வங்கிகளும் நிதி நிறுவனங்களும் முக்கிய வகிபாகம் வகிக்கின்றன.
யுத்தத்திற்கு முன்னர் சில வங்கிகளின் மிகக் குறைந்தளவு கிளைகள் மட்டும் வடமாகாணத்தில் கோலோச்சி வந்தன.

யுத்தம் மௌனித்ததின் பின்னர் அரசு அபிவிருத்தி செய்வதற்காக ஏனைய பல வங்கிகளையும் நிதி நிறுவனங்களையும் வட மாகாணத்தில் திறப்பதற்கு அனுமதி அளித்தது.

அந்த வகையில் வட மாகாணத்தில் தற்போது 250 வங்கிக் கிளைகளும் 450 நிதி நிறுவன கிளைகளும் திறக்கப்பட்டுள்ளன.

மக்கள் கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை அதிகரிக்காத நிலையில் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் அதிகரித்து செயல்படுவதனால் அவற்றின் செயல்பாடுகள் ஒரு போட்டித் தன்மையை ஏற்படுத்தி உள்ளன.

எனவே, மக்களுக்கு விளிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வட மாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் நிதித் துறையினரின் அதிகரித்த செயல்பாடுகள் சாதகமா? பாதகமா? என்னும் தாலைப்பில் பட்டிமன்றம் ஒன்று கடந்த வருடம் 15.01.2017ம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வட மாகாண ஓய்வு நிலை வங்கியாளர் சங்கத்தினால் நடாத்தப்பட்டது.
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதும் கடன் பெற்றார் நெஞ்சம் போன்று கலங்கினான் இலங்கை வேந்தன் என்பன போன்ற தமிழ் வசனங்களை வாதத்தின் போது கையாண்டனர்

இது சாதகமா அல்லது பாதகமா என நோக்கினால் இரண்டு பக்கத்திலும் கருத்தாளம் உள்ளன. பேராசிரியர் திரு. மா. சின்னத்தம்பி, வலம்புரி ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் ஆகியோர் நடுவர்களாக வீற்றிருக்க சாதகமே என்னும் தலைப்பில் திருவாளர்கள் ஹர்சன் (P.B), ஆ.தயாகரன் (H.N.B) S.சஜிவன் (P.B) பே.பகிரதன் (NSB) மு.சிவஞானசுந்தரம் (BOC) ஆகியோரும் திருவாளர்கள் சு.சர்வேஸ்வரன், சு.தர்மினி N.ஐங்கரன் ஏ.சிவராஜா S.லலிசன் ஆகியோர் பாதகமே என்னும் தலைப்பிலும் பங்கு பற்றினர்.

சாதகமே என்ற தலைப்பில் முன் வைத்த கருத்துக்களில் சில.

* கடற்றொழில், விவசாயம் போன்ற அபிவிருத்திப் பணிகளில் வங்கிகள் கடன் வழங்கி ஊக்குவிப்பை செய்கின்றன.

* வங்கிகளின் அதிகரித்த செயல்பாடு கணினி மயப்படுத்தப்பட்ட சேவை வழங்கி வருவதால் பணம் வைப்புச் செய்வதும் பணம் மீளப் பெறுவதும் இலகுவாக்கப்பட்டுள்ளது.

* சர்வ தேச ஆலோசனைகள் கண்காணிப்புக்கள் கிடைகின்றன......

* இந்திய அரசாங்கம் புகையிரத பாதையை அமைத்துத் தந்த போதிலும் புகையிரத நிலையங்களை வங்கிகள் கட்டிக் கொடுத்து சமூக பணிகளில் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

பாதகமே என்னும் தலைப்பில் கருத்துகள் இவ்வாறு அமைந்திருந்தன

* ஊடகவியலாளருக்கு அரசு வழங்கிய பணத்தை நிதி நிறுவனங்கள் இது வரை பெற்றுக் கொடுக்கவில்லை.

* போராளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கடன் வழங்கலாம் என்று அரசு அறிவித்த போதிலும் அரச உத்தியோகத்தரை பிணையயாளியாகக் கேட்டதனால் கடன் பெற்றுக் கொள்ள முடியாமை. ஒரு ஆசிரியை கடன் பெறுவதற்கு கணவரின் சம்மதம் பெற்றால்தான் கடன் பெற முடியும் என்ற சமூக நலன்களைக் கருத்தில் கொள்ளாத நிதி நிறுவனங்களின் செயல்பாடு.

* 10 லட்சம் ரூபா உழவு இயந்திரம் வாங்க கடனாகப் பெற்ற ஒரு பயனாளி 8 லட்சம் ரூபா கட்டியிருந்த போதிலும் மிகுதி 2 லட்சத்துக்காக உழவு இயந்திரதையே தூக்கி மீள எடுக்கின்ற நிலை சமூக நலனைக் கருத்தில் கொள்ளாது லாப நோக்கத்தை மட்டுமே கொண்டது நிதி நிறுவனங்களின் செயல்பாடு போன்ற விடயங்கள் .

நடுவர்களின் தீர்ப்பில் பட்டிமன்ற தலையங்கமானது யதார்த்தத்தோடு சேர்ந்த விடயமாதலாலும் வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் தென் பகுதி நிதி நிறுவனங்களின் வட்டி வீதத்திலேயே வட மாகாணத்திலும் கடன் வழங்குகின்றன என்ற கேள்வியையும் எழுப்பி

சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு ஒரு விசாரணைக் கொமிசன் ஒன்று நியமிக்கப்பட்டு அனைத்து நிதி நிறுவன முகாமையாளர்கள், வர்த்தக தலைவர்கள், ஓய்வுநிலை வங்கியாளர்கள் சங்கத்தின் தலைவர் உறுப்பினர், கடன் பெற்றோர் ஆகியோர் கொண்ட அந்த விசாரணைக் கொமிசனில் எடுக்கப் படும் முடிவுக்கு அமையவே தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும் என்று தீர்ப்பபு வழங்கி மேற்படி பட்டிமன்ற நிகழ்வை நிறைவு செய்தனர்.

மேற்படி நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் உயர் திரு.ஆ.நடராஜன் பிரதம விருந்தினராகவும் மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் திரு.பா.சிவதீபன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

ச.நடராஜா,
செயலாளர்,
வடமாகாண ஓய்வு நிலை வங்கியாளர் நலன்புரிச் சங்கம்.

பட்டிமன்ற நிகழ்வின் இறுவட்டுக்கள் பெற்றுக் கொள்வதற்கு
தொடர்பு கொள்ள வேண்டிய இல.077 355 3002



# Photo Gallery

## Committee Members - 2017




**Standing – Left to right**

Mr.K.Suntharam, Mr.N.Satchithananthan(Vice President), Mr.K.K.Vigneswaran, Mr.A.A.Reginald, Mr.S.Paramanathan, Mr.S.Nadarajah(Asst. Secretary

**Seated- Left to right:**

Mr.K.Balasubramaniam, Mr.J.Muthukumarasamy(Treasurer), Mr.K.Ulaganathan (President), Mr.N.Sivaratnam(Immediate Past President), Mr.A.Rasanayagam(Secretary).

**Absent:** Mr.K.Kaneshamoorthy.

## General Councillors - 2017




**Standing: Left to right**

Mr.K.Suntharam, Mr.A.W.Jesudasan, Mr.D.Sujithan

**Seated – Left to right**

Mr.J.Muthukumarasamy, Mr.K.Balasubramaniam, Mr.N.Sivaratnam, Mr.K.Ulaganathan, Mr.A.Rasanayagam

**Absent:** Mt.N.Satchithananthan, Mr.K.Mahadeva.

# Editorial Committee - 2017




Mr.K.Ulaganathan, Mr.K.Balasubramaniam, Mr.N.Sivaratnam, Mr.K.Pathmanesan, Mr.D.Sujithan.

Absent: Mr.K.Vignarajah

**Area Co ordinators: - 2017**




Mr.S.Paramanathan,(Thenmaradchchy-Chavakachcheri), Mr.A.W.Jesudasan (Chunnakam & Inuvil) Mr.S.Nadarajah(Jaffna Town), Mr.A.A.Reginald (Jafna Town) Mr.P.Balasingham(Manipay, Chunnakam & Vaddukoddai) Mr.M.Mahadevan (Vadamaradchi)

Committee members visited members of the association,
Who are sick.

Mr. K. Kanagavel - 22.07.2017



Mr. S. Rajeswaran (Since deceased ) - 22.07.2017



Mr. K. Kanagasabai - 22.07.2017



Mr. T. Tharmajeyasooriyar - 22.07.2017



Mr. V. Manoharan    22.07.2018



Mr. K. Vigneswaran - 10.01.2018



Mr. C. Nadarajalingam - 10.01.2018



## Pioneers Day 18.08.2017

Chavakachcheri Branch



Point pedro Branch




Second Jaffna  Branch



Nelliyady Branch




## Annual Sports Meet - Northern Province 03.06.2017




# Annual Sports Meet - Northern Province 03.06.2017



## Social Responsibility

Handing over stationery items to the inmates of Home for the Mentally challenged children,
THE ARC, Uduvil, Chunnakam on 06.01.2018




FITNESS
INTEREST
TECHNOLOGY
HNB
FIT
GET MOVING. GET PAID.
ONE MORE REASON
MY FOOTPRINTS
HAVE NO CARBON
Introducing the FIT account from HNB that makes your every move count.
Sync your Fitbit, Apple Watch or Jawbone to the HNB FIT app and earn
10% interest on your savings account every day you hit 10,000 steps.
011 266 0506 / 011 266 2727
GET IT ON
Google Play
Download on the
App Store

# Our sincere thanks to…

- ❖ The authors of the articles who have taken lot of pain to prepare their contributions.
- ❖ The members of the Editorial Committee who have amongst their busy schedule of program managed to co-ordinate with the press.
- ❖ The A.G.M (BoC - N.P) for his message.
- ❖ All the branch Managers of our branches as well as that of other banks.
- ❖ Our area representatives for distributing the magazines to our members and to other respective institutions
- ❖ The "Guru Printers" Thirunelvely for providing their continuous service by printing the magazines in time.

**Thanking all of you who have directly or indirectly involved in our activities.**

